வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 16.08.2023 புதன்கிழமை | இதழ் : 249 | பக்கங்கள் : 16

## சந்நிதியானுக்கு இன்று கொடி

*வடமராட்சி, ஓக. 16*

வரலாற்று சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3:00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகிறது.

மகோற்சவத்தின் சிறப்புத் திருவிழாக்கள் வரிசையில் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7:00

15

## தலைமன்னார் - கொழும்பு ரயில் சேவை செப். 15இல்!



*மன்னார், ஓக.16*

தலைமன்னார் - கொழும்பு இடையிலான புதிய அதிவேக ரயில் சேவையை எதிர்வரும் செப்ரெம்பர் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவில் நேற்று செவ்வாய்க்கிழமை பங்கேற்றபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இந்த ரயில் சேவை செப்ரெம்பர் 15ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்படும். இந்தியா, இலங்கை இடையேயான பயணத்தை இலகுவாக்கும் வகையில் இந்த ரயில் சேவை அமையும் எனவும் ஜனாதிபதி மேலும் கூறினார். (ஐ-ரி)

## மூன்று வாகனங்கள் விபத்து: மூவர் பலி; 8 பேர் படுகாயம்!

### முல்லையில் நேற்று அதிகாலை பயங்கரம்!

*முல்லைத்தீவு, ஓக. 16*

முல்லைத்தீவில் மூன்று வாகனங்கள் மோதி இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவர் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர். 8 பேர் படுகாயமடைந்து கிளிநொச்சி மருத்துமவனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஏ-9 வீதியில் - முல்லைத்தீவு - மாங்குளம் - பனிக்கன் குளத்தில்

15





மடு மாதாவை வழிபடும் ஜனாதிபதி ரணில்

## எரிசக்தி மையமாக மன்னார் மாற்றப்படும்!

### மடுவில் ஜனாதிபதி அறிவிப்பு

*மன்னார், ஓக. 16*

மன்னாரை எரிசக்தி மையமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அத்துடன், மன்னாரின் இயற்கை வளங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்படாமல் இந்த அபிவிருத்தி முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மடு மாதா தேவாலய ஆவணித் திருவிழாவில் நேற்று பங்கேற்ற பின்னர் ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "மடு தேவாலயத்தின் வருடாந்த திருவிழா எமது உள்ளூர் கலாசாரத்தின் ஓர் அங்கம் என்றே கூற வேண்டும். எனவே, இந்த

15

## வவுனியா சீனி தொழிற்சாலை செல்வம் எம். பியே கேட்டார்!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

*மன்னார், ஓக. 16*

வவுனியாவில் சீனி தொழிற்சாலை அமைய வேண்டும் என்று செல்வம் அடைக்கலநாதனே கேட்டார். இதற்கு அமைய அங்கு சீனி தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்கு அமைச்சரவை அனுமதியும் வழங்கியுள் ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்றைய தினம் மடு மாதா ஆலய திருவிழாவில் பங்கேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பியின் கோரிக்கைக்கு அமைவாக எதிர்வரும் செப்ரெம்பர் 15ஆம் திகதி முதல் தலைமன்னாரிலிருந்து கொழும்புக்கு நகரங்களுக்கு இடையிலான விரைவு ரயில் சேவையை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# ஒன்றிணைந்த நாட்டுக்குள் '13' அதிகாரப் பரவலாக்கம்!

## என்றும் இதுவே எமது நிலைப்பாடு தேரர்கள் முன்னிலையில் சஜித்!

### பௌத்தத்துக்கான விசேட இடம் பாதுகாக்கப்படும்

**கொழும்பு, ஓகஸ்ட் 16**

**13ஆம் அரசமைப்பு திருத்தம் தொடர்பில் இன்றும் நாளையும் ஒரே நிலைப்பாட்டையே நாம் கொண்டுள்ளோம். என்றும் ஒன்றிணைந்த நாட்டுக்குள் 13ஆவது திருத்த சட்டத்தின் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி எதிர்பார்க்கிறது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**



ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண தேசிய ஒற்றுமை மிகவும் அவசியம். நாட்டின் அனைத்து பிரஜைகளும் சமமாக கருதப்பட்டு ஒவ்வொரு சமூகமும் சுயமரியாதையுடன் வாழும் உரிமை வழங்கப்பட வேண்டும். இன்று இவை அச்சுறுத்தலுக்குள்ளாகி உள்ளன என்றும் அவர் பிக்குகள் முன்னிலையில் தெரிவித்தார்.

விழுமியம் மிக்க சமூகத்துக்கான பிக்குகள் ஆலோசனை பேரவையின் இரண்டாம் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை காலி நகர சபை கேட்போர்கூடத்தில் நடந்தது. இதில் பங்கேற்று உரையாற்றிய

15



தமது முன்னோருக்கு பிதிர்க்கடன் செலுத்துவதற்காக ஆடி அமாவாசை தினமான நேற்று கீரிமலை கடற்கரையில் குவிந்த இந்து மக்கள்...!

## மீண்டும் ஒரு போர் வேண்டாம்!

### பாப்பரசரின் பிரதிநிதி மன்னாரில் தெரிவிப்பு

*மன்னார், ஓகஸ்ட் 16*

மீண்டும் ஒரு போர் வேண்டாம். இனம், மதம், மொழி, சாதி கருத்து போன்ற வேற்றுமைகளுக்கு அப்பால் அன்பும் அமைதியும் சகிப்புத்தன்மையும் நிலைபெறுவதாக - வெறுப்பும் விரோதமும் வேண்டாம் என்று தெரிவித்துள்ளார் பாப்பரசர் பிரான்சிஸின் இலங் கைக்கான பிரதிநிதி பிராயன்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

கோவில் யானை ஒன்று நன்றாகக் குளித்துவிட்டு நெற்றியில் பட்டை தீட்டிக் கொண்டு சுத்தமாக வந்து கொண்டிருந்தது.

ஓர் ஒடுக்கமான பாலத்தில் அது வரும்போது எதிரே சேற்றில் குளித்துவிட்டு ஒரு பன்றி வாலை ஆட்டிக் கொண்டே வந்தது.

யானை ஓர் ஓரத்தில் ஒதுங்கி நின்று அதற்கு வழி விட்டது.

அந்தப் பன்றி எதிரே இருந்த இன்னொரு பன்றியிடம், 'பார்த்தாயா, அந்த யானை என்னைக் கண்டு பயந்து விட்டது!', என்று சொல்லிச் சிரித்தது.

அந்த யானையைப் பார்த்து இன்னொரு யானை, 'அப்படியா, நீ பயந்து விட்டாயா?' என்று கேட்டது.

அதற்குக் கோவில் யானை கீழ்க்கண்டவாறு பதில் சொன்னது:

'நான் தவறி இடறி விட்டால் பன்றி நசுங்கி விடும். மேலும் நான் சுத்தமாக இருக்கிறேன். பன்றியின் சேறு என் மேல் விழுந்து நானும் அசுத்தமாகி விடுவேன். இந்தக் காரணங்களால், நான் ஒதுங்கிக் கொண்டேன்.'

அண்மையில் கொஞ்சநாட்களாக தெற்கில் சிலர் தத்தமக்கு வாய்க்கு வந்ததுபோல பேசிக்கொண்டிருக்கின்றனர்.

பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்தினால், நாடு பிளவுபட்டுவிடும் என்பவர்கள் ஒருபுறம். அப்படி நடந்தால் மீண்டும் ஓர் இரத்தக்களரி ஏற்படும் என்று ஒருசாரார் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

வடக்கில் நடக்கும் பௌத்தமயமாக்கலுக்கு எதிராக தமிழர்கள் போராடுகின்றபோது அல்லது அதற்கு எதிராகக் கருத்து முன்வைக்கப்படுகின்ற போதும் தெற்கில் சிலர் வீரவசனம் பேசுகிறார்கள்.

இராவணேஸ்வரன் என்ற இராவணன் சிங்களவர் என்று பாராளுமன்றத்தில் சரத் வீரசேகர தெரிவித்த கருத்துக்கு எதிராக நமது சிவஞானம் சிறிதரன் எதிர்வினையாற்றியிருந்தமை குறித்து நேற்றும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அது தொடர்பாக ஈழநாடு மறுதினம் ஆசிரியத் தலையங்கம் எழுதியிருந்தது. அதனைப் படித்து விட்டு ஒரு நண்பர், பாராட்டுத் தெரிவித்திருந்தார். அந்தப் பாராட்டுடன் கூடவே மேலேயுள்ள குறும்கதையையும் அனுப்பியிருந்தார்.

'கோட்டாபயவின் வீழ்ச்சியால் நிலை குலைந்துபோன சிங்கள - பௌத்த தேசியவாத தரப்புகள், இப்போது இராவணனை தூக்கிப்பிடிக்க முற்படுகின்றனர். 13ஆவது திருத்தச் சட்டத்தை ஒருபுறம் கடுமையாக எதிர்த்து களமிறங்கும் சிங்கள தேசியவாதிகள் மறுபுறம் இந்தியாவின் புராணிய நம்பிக்கையில் வில்லனாக நோக்கப்படும் இராவணனை பயன்படுத்தி சிங்கள தேசியவாதத்துக்கு புதிய இரத்தம் பாய்ச்ச முற்படுகின்றனர். ஆனால், இவ்வாறான விடயங்களில் தேவையில்லாமல், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் விளக்கமளிக்க வேண்டியதில்லை.' என்று ஆசிரியர் சுட்டிக் காட்டியிருந்ததைப் போல, நமது தலைவர்கள் தெற்கின் இத்தகைய கருத்துகளுக்கு எதிராக கருத்துச் சொல்லவேண்டியதில்லை என்று தெரிவித்திருந்த நண்பர், மேலேயுள்ள கதையில் கோவில் யானை நடந்துகொண்டதுபோல, விலத்திச் செல்வது அவர்களில் சேறுபடாமல் நடந்துகொள்ள உதவும் என்று தெரிவித்திருக்கிறார்.

கடைசியாக 'நான் வடக்கு, கிழக்குக்கு வருவேன். நீங்கள் (வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள்) விகாரைகளைத் தடுக்க முற்பட்டால், மகா சங்கத்தினர்மீது கை வைக்க முயன்றால் நான் களனிக்கு சும்மா திரும்பி வரமாட்டேன். உங்களின் தலைகளைக் கையில் சுமந்து கொண்டுதான் களனிக்கு வருவேன்.' என்று தெரிவித்திருக்கிறார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா.

அவரைப் போன்றவர்களின் கருத்துகளுக்கு எதிர்வினையாற்றுவது புத்திசாலித்தனமானதல்ல. அவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் செல்லாக் காசாகிப்போனவர்கள். இப்படிச் சொல்வதன் மூலமாவது விட்ட இடத்தை பிடிக்கலாம் என்று நினைக்கிறார்கள். அவர்கள் கருத்துக்கு எதிர்வினையாற்றினால் அவர்களின் இலக்கை அடைய நாம் உதவுவதாகவே முடியும்.!

**- ஊர்க்குருவி.**





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி தீர்த்தத் திருவிழா நேற்று செவ்வாய்க் கிழமை கீரிமலை கண்டகி தீர்த்தக்கரையில் நடைபெற்ற போது...!



# மேர்வின் சில்வாவுக்கு அரசு மருத்துவம் செய்யவேண்டும்!

## சீ. வீ. கே. சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 16

மேர்வின் சில்வா இன மோதலை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு மனநிலை பிரச்னை என்றால் அதற்கான மருத்துவத்தை செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இவர் அரசியலில் இல்லாத கட்சிகள் இல்லை. அனைத்துக் கட்சிகளிலும் இருந்து, எல்லா கட்சியினரும் அவரை துரத்தி உள்ளார்கள். தான் இருக்கின்றார் என்பதை காண்பிப்பதற்காக இவ்வாறு மடமைத்தனமான பேச்சுகளை பேசுகின்றார்.

இவரை கணக்கெடுப்பதே மிகவும் பிழை. அவரை கவனிக்காமல் அவர்பாட்டிலேயே செல்வதற்கு விட்டுவிட வேண்டும். உண்மையாகவே இந்த நாட்டில் சட்டம், ஒழுங்குகள் இருக்கின்றது என்றால் பொலிஸார் இவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

ஏனென்றால், ஏவரும் ஒன்று வன்முறையை தூண்டுகின்றார் இரண்டாவது இன மோதலை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றார். இவருக்கு இன மோதலை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு மனோநிலை பிரச்னை என்றால் அதற்கான மருத்துவத்தை செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை. இல்லையேல், இவரை இந்த இரண்டு குற்றங்களுக்காகவும் நீதிமன்றத்தில் முன்னிறுத்தி வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் - என்றார். (ஐ)



# பாடசாலைகளுக்கு நாளைமுதல் விடுமுறை

கொழும்பு, ஓக. 16

அரச பாடசாலைகள் மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணைக்கான முதற்கட்ட விடுமுறை நாளை ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, இந்த மாதம் 28ஆம் திகதி மீண்டும் பாடசாலைகள் ஆரம்பமாகும். இரண்டாம் கட்ட பாடசாலை தவணை ஓகஸ்ட் 28 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

# விவசாயத் துறையின் வளர்ச்சிக்கு ஓமானுடன் ஒப்பந்தம் கைச்சாத்து!

கொழும்பு, ஓக. 16

நாட்டின் விவசாயத்துறையின் வளர்ச்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு இலங்கையும் ஓமானும் இணங்கியுள்ளன.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிற்கும் இலங்கைக்கான ஓமான் தூதுவர் அஹமட் அலி சயீத் அல் ரஷ்திக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

செய்கைகளுக்கு தேவையான யூரியா உரத்தை தொடர்ச்சியாக வழங்குவதற்கு ஓமான் அரசாங்கம் வழங்கும் ஆதரவு குறித்தும் இந்த கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் தற்போது ஓமானில் இருந்து யூரியா உரத்தை இறக்குமதி செய்து வருவதால், இலங்கைக்கும் அதனை பெற்றுக்கொள்ள முடியும் என ஓமான் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயத்துறையின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படவுள்ள உடன்படிக்கைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்க வேண்டுமாயின், அதற்குத் தேவையான பத்திரத்தை தயாரிக்குமாறும் அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் மகிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

2018 ஆம் ஆண்டில், ஓமானும் இலங்கையும் இதேபோன்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுள்ளன. எனினும், அதற்கான பத்திரத்தில் இதுவரை கையெழுத்திடப்படவில்லை. (ஐ)

16.08.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 31

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

## சமஷ்டி வரும்போது...?

சமஷ்டி தீர்வைத் தவிர வேறு எதனையும் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று சில அரசியல் குழுக்கள் இப்போதும் வாதிடுகின்றன. 1972 மற்றும் 1978 அரசியல் அமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தநிலையில் தற்போது அரசியலமைப்பில் உள்ளவற்றை ஏற்றுக்கொண்டால், அதன் பின்னர் - தமிழர் சமஷ்டி கோரிக்கையை நிரந்தரமாகக் கைவிட வேண்டிய நிலைமை உருவாகுமென்று அவ்வாறானவர்கள் வாதிட முயற்சிக்கின்றனர். இது அடிப்படையிலேயே தவறானதொரு பார்வை. சமஷ்டி கட்சியை (தமிழரசு கட்சி) உருவாக்கிய எஸ். ஜே. வி. செல்வநாயகம், இப்படியான புரிதலில் இருந்து சமஷ்டி கோரிக்கையை முன்வைக்கவில்லை. சமஷ்டிதான் இலக்கென்றாலும்கூட அதனை அடையும் வழியில் ஏனைய விடயங்கள் எவற்றையுமே பரிசீலிக்கக்கூடாதென்னும் தமிழ் அடிப்படைவாத சிந்தனை செல்வாவிடம் இருக்கவில்லை. அவ்வாறு இருந்திருந்தால் பண்டா - செல்வா மற்றும் டட்லி - செல்வா உடன்பாட்டை நோக்கி அவர் சென்றிருக்கவே முடியாது.

தமிழ் மக்களின் ஒரு தலைமுறை அரசியலமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லைத்தான். அரசியல் யாப்பின் பிரதிக்கு எரியூட்டியது தான். தனிநாட்டுக்கு வாக்களித்ததுதான். இவை வரலாறு. ஆனால், இன்றைய நிலைமை என்ன? பன்னிரெண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர். இப்போதும் நாட்டைவிட்டு வெளியேறும் மோகத்துடனேயே மத்தியதர வர்க்க மக்கள் இருக்கின்றனர். தற்போது அதிகமானவர்கள் கனடாவுக்கு செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். தமிழ் சூழலில் பத்து இளைஞர்களை தெரிவு செய்தால் அதில் எட்டுப் பேர் ஐரோப்பிய நாடுகளில் வாழும் விருப்பத்தோடுதான் இருக்கின்றனர்.

இந்த நிலைமை தொடருமாயின் இன்னும் பத்து வருடங்களில் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் இரண்டாவது சிறுபான்மையாகவே இருப்பார்கள். அரச நிர்வாகத்தில் தமிழர்களின் பங்குபற்றல் மிகவும் குறைவாகவே இருக்கும். இந்த நிலையில் நிர்வாக திறமையுள்ள மத்தியதர வர்க்கம் தமிழர் மத்தியில் இருக்காது. ஏற்கனவே ஆற்றலுள்ள தமிழ் மத்தியதர வர்க்க சமூகமொன்று முற்றிலுமாக வெளியேறிவிட்டது. இந்த நிலையில் மேலும் மக்கள் வெளியேறுவார்களாக இருந்தால் நிலைமை மேலும் மோசமடையும். வெளிநாடுகளில் இருந்துகொண்டு சமஷ்டி, இனப்படுகொலை, போர்க் குற்றம் - என்றவாறு உச்சரித்துக் கொண்டிருப்பதில் எதுவித பொருளுமில்லை.

நிலத்தில் மக்கள் இருக்க வேண்டும். அந்த மக்கள் ஒரு திரட்சியாக இருக்க வேண்டும். அந்த மக்கள் மத்தியில் ஆளுமையுள்ள அரசியல் தலைமையொன்று இருக்க வேண்டும். அரசியல் உரையாடல்களில் பங்குகொள்ளும் ஓர் இளைய தலைமுறை இருக்க வேண்டும். இல்லாவிட்டால், சமஷ்டி வந்தும் பயனில்லை. இந்த யதார்த்தத்தை தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், புத்திஜீவிகள், ஊடகங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பார்கள் - அதே போன்று, மக்களை அவர்களின் சொந்த நிலத்தில் வாழவைக்கும் பொறிமுறையில்லாதபோது அரசியல் தீர்வு தொடர்பான கோரிக்கைகளில் எவ்வித பயனுமிருக்காது. ஐரோப்பிய நாடுகளில் வாழும் மக்கள் - சமஷ்டி வந்தாலும்கூட - ஐரோப்பாவின் செழிப்பான வாழ்க்கையை புறம் தள்ளிவிட்டு ஒரு போதுமே, வடக்கு - கிழக்குக்கு திரும்பப் போவதில்லை. புலம்பெயர் சமூகத்தின் அடுத்த தலைமுறை இந்த நிலத்தை ஏறெடுத்தும் பார்க்கப் போவதில்லை.

# வீட்டுத்தோட்டப் போட்டிக்கான விதைகள் இலவச விநியோகம்

*யாழ்ப்பாணம், ஓக. 16*

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களிடையே வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக "மாணாக்க உழவர்" என்னும் வீட்டுத்தோட்டப் போட்டியை ஆண்டு தோறும் நடத்தி வருகிறது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பற்றாக்குறை, நஞ்சற்ற உணவுற்பத்தி, மாணவர்களை மனஅழுத்தங்களில் இருந்து விடுவித்தல் ஆகியவனவற்றை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இந்தப் போட்டி இந்த ஆண்டும் நடைபெறவுள்ளது.

இதில், கலந்து கொள்ளும் மாணவர்களுக்குத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தற்போது இலவசமாக விதைப் பொதிகளை வழங்கி வருகின்றது.

இந்தப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் யாழ்ப்பாணம், அரசடி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைமை பணிமனையில் போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தையும், விதைகளையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

இன்று புதன்கிழமை முதல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை தினமும் பிற்பகல் 1.30 மணி முதல் 4.30 மணி வரை பெற்றோர் சகிதம் வந்து மாணவர்கள் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தெரிவித்துள்ளது.

போட்டியில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மாணாக்க உழவர் சான்றிதழ்களும் சிறப்பாக வீட்டுத்தோட்டச் செய்கையை மேற்கொள்பவர்களுக்குச் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நுகர்வோர் அதிகார சபை ரூ. 13 கோடி அபராதம் விதிப்பு

*கொழும்பு, ஓக. 16*

நுகர்வோர் அதிகார சபையால் கடந்த ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் குற்றவாளிகள் எனக் கண்டறியப்பட்ட 13 ஆயிரத்து 493 பேருக்கு சுமார் 13 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.

ஜூன் மாதத்தில் மட்டும் 2 ஆயிரத்து 411 சோதனைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகள் என காணப்பட்டவர்களுக்கு 2 கோடியே 36 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.

இந்த சோதனைகளில் பழுதடைந்த உணவுப் பொருட்களை விற்றவர்கள், விலைகளை காட்சிப்படுத்தப்படாத வர்கள், காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை போன்ற குற்றங்களுக்காகவே இந்த அபராதம் விதிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பண்டகை பிள்ளையாருக்கு நேற்று தீர்த்தம்




*கொழும்பு, ஓக. 16*

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் ஆலய தீர்த்தத் திருவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற வசந்தமண்டப பூசைகளை தொடர்ந்து விநாயகர் உள்வீதியுலா வந்து 12.30 மணியளவில் தீர்த்தக் கேணியில் தீர்த்தோற்சவம் நடைபெற்றது.

ஆடி அமாவாசை தினமான நேற்று பெரும்பாலான பக்தர்கள் விரதத்துடன் வந்திருந்து விநாயகரை வழிபட்டனர். (ஐ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஓகஸ்ட் - 16 புதன்கிழமை
சோபகிருது வருடம் - ஆடி 31

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 09.00 - 10.30 |
| ராகு காலம் | : | 12.00 - 01.30 |
| திதி | : | அமாவாசை |




**மேடம்**
அரசு காரியங்கள் சாதகமாக முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சில சூழ்ச்சிகளை கற்றுக்கொள்வீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
சொத்து பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு சில ஆலோசனையை தருவீர்கள். வெற்றியைத் தரும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் இதுவரை வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் தள்ளிப்போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். மனசாட்சிபடி செயல்படுவீர்கள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். உங்களை குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் மோதல்கள் வேண்டாம்.

**கன்னி**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். புது பொறுப்புகள் ஏற்பீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**துலாம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். சாதிக்கும் நாள்.

**விருட்சிகம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் குறைந்து மனதில் மகிழ்ச்சியாக இருக்கும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வருவார்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகபடுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் பெரிய இழப்புகள் ஏற்பட கூடும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மீனம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

# இந்திய சுதந்திர தினம் நேற்று தமிழகத்தில் கொண்டாட்டம்!



சென்னை, ஓக. 16

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னை கோட்டை கொத்தளத்தில் முதல்வர் மு. க. ஸ்டாலின் தேசியக் கொடியை ஏற்றினார்.

77ஆவது சுதந்திர தினம் இந்தியா முழுவதும் நேற்று கோலா கலமாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு மாநிலத்தின் பிர தான நிகழ்வு அதன் தலைநகரான சென்னையில் உள்ள சென். ஜோர்ஜ் கோட்டையில் முதல் வர் மு. க. ஸ்டாலின் தேசியக் கொடியை நேற்று ஏற்றி, கொடி வணக்கம் செலுத்தினார். இதனையடுத்து முதல்வர் மு.க. ஸ்டா லின் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையாற்றினார்.

தமிழ்நாட்டின் மாவட்டங்கள் தோறும் சுதந்திர தின நிகழ்வு கொண்டாடப்பட்டது. சுதந்திர தினத்தையொட்டி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. 40 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)

# மொழிப்பற்று, இனப்பற்றுடன் நாட்டுப்பற்றும் கொண்டோர் நாம்!

## சுதந்திர நாளில் முதல்வர் உரை

சென்னை, ஓக. 16

“77ஆவது ஆண்டை தொடங்கியுள்ளது இந்திய ஒன்றியத்தின் விடுதலை நாள். இந்திய ஒன்றியத்தின் முக்கியமான அங்கம் நம் தமிழ்நாடு. மூத்த மொழியாம் செம்மொழி தமிழை தாய் மொழியாக கொண்ட நம் தமிழ்நாடு, இடைக்காலத்தில் சென்னை மாகாணம், மெட்ராஸ் என்று அழைக்கப்பட்டது.

திராவிட முன்னேற்ற கழகத்தின் ஆட்சி அமைந்த பிறகு, பேரறிஞர் அண்ணா தமிழ் மண்ணின் முதலமைச்சர் ஆன பிறகு, 1967 ஜூலை 18ஆம் நாள் தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டது. தமிழ்நாடு பெயர் வேண்டும் என சட்டமன்றத்தில் வலியுறுத்தியவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி. தமிழ்நாடு பெயர் வேண்டுமென கேட்டவர் பெரியார்.

இத்தகைய பார் போற்றும் தமிழ்நாடு மாநிலத்தின் முதல்வராக பொறுப்பேற்ற நான் மூன்றாவது ஆண்டாக இந்திய நாட்டின் தேசியக் கொடியை ஏற்றுவதில் பெருமிதம் கொள்கிறேன். 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த புனித ஜோர்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றியது பெருமை. இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய மக்களுக்கு வணக்கங்கள். விடுதலை வீரர்களை போற்றி பாராட்டுவதில் திராவிட முன்னேற்ற கழக அரசு யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல.

மொழிப்பற்று, இனப்பற்றுடன் நாட்டுப்பற்றையும் இரத்த உணர்வாக கொண்டவர்கள் நாம். 1962ஆம் ஆண்டு சீன நாட்டால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட போது நேருவுக்கு துணையாக நின்றவர் அண்ணா. 1971ஆம் ஆண்டு இந்தியாவை பாகிஸ்தானை அச்சுறுத்திய போது இந்திய மாநிலங்கள் எல்லாம் 25 கோடி ரூபாய் நிதி திரட்டி, அன்றைய பிரதமர் இந்திரா காந்தியிடம் வழங்கின. அதில் தமிழ்நாட்டின் பங்கு என 6 கோடி ரூபாய் வழங்கியது முன்னாள் முதல்வர் கருணாநிதி தலைமையிலான அரசு - என்றார். (ஐ)

# திராவிடர் கழக வீரமணிக்கு தகைசால் தமிழர் விருது

சென்னை, ஓக. 16

திராவிடர் கழக தலைவர் கி. வீரமணிக்கு தகைசால் தமிழர் விருதை வழங்கி முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் சிறப்பித்தார்.

சென்னை கோட்டை கொத்தளத்தில் நடைபெற்ற சுதந்திர நாள் விழாவில் தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இதனை அடுத்து பல்வேறு துறைகளில் சிறந்து



விளங்குவோருக்கு விருது வழங்கி சிறப்பித்தார். குறிப்பாக திராவிடர் கழக தலைவர் கி.வீரமணிக்கு தகைசால் தமிழர் விருதை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இதே போன்று வேலூர் தொழில்நுட்ப பல்கலைகழகத்தின் கணினித்துறை பேராசிரியர் முனைவர் டபிள்யூ. பி. வசந்தா கந்தசாமி-க்கு டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் விருது வழங்கப்பட்டது. (ஐ)

# ஜெயலலிதாவே எனக்கு நன்றிக்கடன் பட்டவர்!

## காங்கிரஸ் எம். பி. திருநாவுக்கரசு

புதுக்கோட்டை, ஓக. 16

“ஜெயலலிதாதான் எனக்கு நன்றிக்கடன் பட்டவரே தவிர, நான் அவருக்கு நன்றிக்கடன்பட்டவன் கிடையாது. நான் ஜெயலலிதாவை காப்பாற்றியதால் தான் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தார். மீண்டும் அவர் முதல்வரனார். அ. தி. மு. கவினர் எல்லாம் அமைச்சர்களாகி சௌகரியமாக இருக்கின்றனர்” என்று காங்கிரஸ் எம்பி திருநாவுக்கரசர் கூறியுள்ளார்.

புதுக்கோட்டையில், காங்கிரஸ் எம். பி. திருநாவுக்கரசர் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் 1989இல் சட்டப்பேரவையில் நடந்த நிகழ்வு குறித்தும், திருநாவுக்கரசர் உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்வதாக பேசியிருந்தது குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர், “ஜெயக்குமார் எந்த காலத்தில், அ. தி. மு. கவில் சேர்ந்தார்? எந்த காலத்தில் அ. தி. மு. கவில் இருந்தார்? என்று எனக்கு தெரியவில்லை. எம். ஜி. ஆரை எல்லாம் அவர் பார்த்திருக்கிறாரா? என்றும் எனக்கு ஞாயாபகம் இல்லை. அவர் ஜெயலலிதாவிடம் எப்போது வந்து சேர்ந்தார் என்பதும் எனக்குத் தெரியாது. ஜெயலலிதாவைப் பொறுத்தவரை, ஜெயலலிதாதான் எனக்கு நன்றிக்கடன்பட்டவரே தவிர, நான் ஜெயலலிதாவுக்கு நன்றிக் கடன்பட்டவன் கிடையாது.

நான் ஜெயலலிதாவை காப்பாற்றியதால்தான் அவர் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்தார். நான் காப்பாற்றிய தால்தானே மீண்டும் அவர் முதல்வரானார். நான் காப்பாற்றியதால்தானே, இவர்கள் எல்லாம் அமைச்சர்களாகி சாப்பிட்டு சௌகரியமாக இருக்கின்றனர். அப்போது ஜெயலலிதா எனக்கு நன்றியாக இருக்கவேண்டுமா? நான் ஜெயலலிதாவுக்கு நன்றியாக இருக்கவேண்டுமா?. ஜெயலலிதாவுக்கு நான் நிறைய செய்திருக்கிறேன். ஜெயலலிதா எனக்கு நிறைய கெடுதல்தான் செய்துள்ளார். அதுமுடிந்து போன விஷயம். அவர் பாவம் இயற்கை எய்திவிட்டார். அவரைப்பற்றி நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. இப்போது எனக்கும் ஜெயக்குமாருக்குமா பிரச்னை? எனவே, அ. தி. மு. கவினர் சம்பந்தமே இல்லாமல் பேசிக்கொண்டுள்ளனர். ஜெயலலிதாதான் என்னிடம் உண்டுள்ளார். நான் அ. தி. மு. கவில் உண்ணவே இல்லை. உண்ணாமல் எப்படி உண்ட வீட்டுக்கு துரோகம் செய்ய முடியும்?” என்றார். (ஐ)

# மொட்டு கட்சியை அழிக்கும் வேலையைச் செய்யாதீர்கள்!

## ரணிலிடம் காட்டமாகத் தெரிவித்த பஸில்



கொழும்பு, ஓக. 16

**மொட்டுக் கட்சிக்கு எதிராக-ரணிலுக்கு ஆதரவாக நிமல் லான்சாவால் உருவாக்கப்பட்டு வரும் கூட்டணிக்குத் தனது எதிர்ப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார் மொட்டுக் கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ.**

ஜனாதிபதியைத் தனியாக நேரில் சந்தித்து இந்த எதிர்ப்பை அவர் வெளியிட்டுள்ளார் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

"உங்களை ஜனாதிபதியாக்கியது மொட்டுக் கட்சி. அந்தக் கட்சியை அழிக்கும் வேலையைச் செய்யவேண்டாம்" என்று ரணிலிடம் பஸில் காட்டமாகக் கூறியுள்ளார் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வன்முறைக்கு இடமில்லை!

## பிரதமர் திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 16

"இனவாதத்தாலும் வன்முறையாலும் மீண்டும் இங்கு இரத்த ஆறு ஓடக்கூடாது என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாகவுள்ளார்" என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இனவாதக் கருத்துக்கள் ஊடாக வன்முறையைத் தூண்ட இந்த நாட்டில் எவருக்கும் இனி அனுமதி இல்லை.

இன, மத பேதமின்றி நாம் செயற்பட வேண்டும். நாட்டின் பிரஜைகள் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போன்று ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.

அப்போதுதான் நல்லிணக்கம் இங்கு நிரந்தரமாகும்." - என்றார்.

தான் வடக்கு, கிழக்குக்குச் செல்லவுள்ளதாகவும், அங்கே விகாரைகள் மற்றும் பிக்குகள் மீது கை வைக்க முயன்றால் அங்குள்ளவர்களின் தலைகளுடனேயே களனிக்குத் திரும்பவுள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே பிரதமர் தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# ஆசிரியை மீது அசிட் வீச்சு

கொழும்பு, ஓக. 16

தலாத்துஓயா பிரதேச செயலகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரிடம் முறைப்பாடு செய்த ஓய்வுபெற்ற ஆசிரியை ஒருவர் மீது அசிட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட ஓய்வுபெற்ற ஆசிரியை பொலிஸ் மா அதிபர் மற்றும் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தலைக்கவசத்தால் முகத்தை மறைத்த நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் தனது வீட்டுக்கு வந்து தனது முகத்தில் அசிட் வீசி தாக்குதல் நடத்தியதாக கூறும் பாதிக்கப்பட்ட ஆசிரியை, இது தொடர்பில் பொலிஸ் அத்தியட்சகரிடம் ஏற்கனவே முறைப்பாடு செய்துள்ளதாகவும் கூறியுள்ளார். (அ)

# ஆள் கடத்தல்கள் அதிகரிப்பு தேசிய பாதுகாப்புக்கு சவால்

## பாதுகாப்புச் செயலர் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 16

"ஆட்கடத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் அதிகருத்து வருவதுடன், இது ஒரு சர்வதேச வியாபாரமாக மாறிவருகின்றது." - என்று பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

இந்நிலைமை ஒரு சிக்கலான சவாலை ஏற்படுத்துவதுடன், இது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையை மட்டுமல்லாமல் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆட்கடத்தல் நடவடிக்கைகள் தொடர்பாக நாட்டிலுள்ள பிரதேச செயலாளர்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வின் ஆரம்ப நிகழ்வு கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இங்கு பிரதான உரை நிகழ்த்தும் போதே பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

ஆட்கடத்தலுக்கு எதிராக சிவில் சமூக அமைப்புகளை மேம்படுத்துதல்" எனும் திட்டத்தின் கீழ், யுஎஸ்எய்ட்டின் நிதியுதவியுடன் சேப் அமைப்புடன் இணைந்து, தேசிய ஆட்கடத்தல் தடுப்பு செயலணி இந்த மூன்று நாள் செயலமர்வினை ஏற்பாடு செய்துள்ளது.

பாதுகாப்புச் செயலாளரின் பணிப்புரைக்கு அமைய தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் ருவன் குலதுங்கவின் வழிகாட்டலின் கீழ் இந்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இதில் 36 பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

ஆட்கடத்தல் தொடர்பான அச்சுறுத்தலின் தீவிரத்தை உணர்ந்து, ஆட்கடத்தலைக் கண்காணித்து எதிர்த்துப் போராடுவதற்காக 2021-2025 ஆம் ஆண்டுக்கான தேசிய மூலோபாய செயல் திட்டத்தை நாங்கள் உருவாக்கியுள்ளோம் அத்துடன், எங்கள் அணுகுமுறையானது தடுப்பு, பாதுகாப்பு, வழக்கு விசாரணை மற்றும் கூட்டாண்மை என்ற நான்கு தூண்களை அடிப்படையாகக் கொண்டது என பாதுகாப்புச் செயலர் மேலும் குறிப்பிட்டார்.

கூட்டு முயற்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த பாதுகாப்புச் செயலாளர், ஆட்கடத்தல்களை முழுமையாக தடுப்பதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மிகவும் முக்கியமானது எனத் தெரிவித்தார்.

தற்போது, இந்த குற்றத்திற்கு எதிரான எங்கள் முயற்ச்சியில் ஆட்கடத்தல் தடுப்பு பணிக்குழுவுடன் 20 பங்குதாரர்கள் சேர்ந்து செயற்படுகிறார்கள் என மேலும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# தென்னிலங்கை விபத்தில் வயோதிபத் தம்பதி மரணம்!

கொழும்பு, ஓக. 16

காலி, பெந்தோட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் வயோதிபத் தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.

அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் முன்னால் சென்ற பாரவூர்தியுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் பலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே உயிரிழந்துள்ளனர்.

69 வயதுடைய கணவன் சம்பவ இடத்திலும், படுகாயமடைந்த 65 வயதுடைய மனைவி பெந்தோட்டை வைத்தியசாலையிலும் சாவடைந்துள்ளனர் என்று விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# காதலிப்பதை போன்று காதலனிடம் நிதிமோசடி

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஓக. 16

காதலனை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதாக தெரிவித்து நிதி மோசடியில் ஈடுபட்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் வசிக்கும் பெண் ஒருவரே யாழ்ப்பாணம் மானிப்பாயில் வசிக்கும் இளைஞரிடம் இவ்வாறு நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

கிளிநொச்சியில் வசிக்கும் தனது காதலியை பார்ப்பதற்காக குறித்த இளைஞர் வருகை தரும் சந்தர்ப்பங்களில் தனது உறவினர் ஒருவர் அவுஸ்திரேலியாவிலிருந்து தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியுள்ளார் என தெரிவித்து உரையாட செய்துள்ளார்.

நீண்ட நாட்கள் இவ்வாறு உரையாடியதன் பின்னர் காதலனை அவுஸ்திரேலியாவிற்கு அழைப்பித்துக்கொள்ள முடியும் என தொலைபேசியில் உரையாடியவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய 18 இலட்சம் ரூபாய் பணத்தை யுவதியிடம் காதலன் கொடுத்துள்ளார்.

பணத்தை பெற்றுக்கொண்ட தினத்திலிருந்து யுவதியின் நடத்தையில் மாற்றங்கள் ஆரம்பித்ததாகவும் அதன் பின்னர் காதல் தொடர்பும் துண்டித்துக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே காதலன் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கு அமைய குறித்த யுவதி கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள யுவதியை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# மாணவிகளின் தண்ணீர் போத்தல்களில் கோபத்தால் விசம் கலந்த மாணவி!

கொழும்பு, ஓக. 16

விசக்கலவையுடனான நீரை பருகிய மாணவர்கள் அறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று நாராம்மல பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களே விசக்கலவையுடனான நீரை பருகியுள்ளனர்.

10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் அதே தரத்தில் கல்வி கற்கும் சக மாணவிகளுடன் குரோதமடைந்தமையினால் மாணவிகளின் தண்ணீர்ப் போத்தல்களில் விசத்தை கலந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அனுமதியின்றி வெளிநாடு செல்ல தடை

கொழும்பு, ஓக. 16

உயர்கல்வி அமைச்சின் அனுமதியின்றி பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாது என பல்கலைக்கழக பேராசியர்கள் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு ரகசியமாக வெளிநாடுகளுக்கு பேராசிரியர்கள் எவரேனும் சென்றிருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என அதன் பேச்சாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இளங்கசிங்ஹ தெரிவித்தார்.

அடுத்த வருடத்திற்குள் 26 வீதமான பல்கலைக்கழக பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறும் அபாயம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கண்ணிவெடி அகற்ற ஜப்பான் 170 மில்லியன் ரூபாய் நிதியுதவி

கொழும்பு, ஓக. 16

வடக்கு மாகாணத்தில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக ஜப்பானிய அரசாங்கம் நிவாரணத் திட்டத்தின் கீழ் 170 மில்லியன் ரூபாய் உதவித் தொகையை வழங்கியுள்ளது.

நாட்டின் கண்ணிவெடி அகற்றும் திட்டத்திற்கு அதன் தொடர்ச்சியாக ஆதரவளித்து வரும் ஜப்பான், இதுவரை மொத்த உதவித் தொகையாக 43 மில்லியன் டொலர்களுக்கு மேல் வழங்கியுள்ளது.

அந்தப் பணத்தைப் பயன்படுத்தி கடந்த 2016ஆம் ஆண்டு முதல் கடந்த ஜூலை மாதம் வரை 11 ஆயிரத்து 471 சாதாரண கண்ணிவெடிகளும், 161 இராணுவ டாங்கி எதிர்ப்பு கண்ணிவெடிகளும் அகற்றப்பட்டுள்ளன. (அ)

# இரு ஆவணங்களை விழுங்கிய பெண் சட்டத்தரணிக்கு பிணை

கொழும்பு, ஓக. 16

நீதிமன்றப் பெட்டகத்திலிருந்து இரண்டு ஆவணங்களைக் கிழித்து மென்று தின்றுவிட்டதாகக் கூறப்படும் பெண் சட்டத்தரணி 500,000 ரூபா சரீரப் பிணையில் நேற்று முன் தினம் விடுதலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கையை எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கெக்கிராவ பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதிமன்ற ஊழியர்களின் புகாரின் பேரில், அந்த சட்டத்தரணியை பொலிஸார் முன்பு கைது செய்தனர். நீதிமன்ற ஊழியர்கள் முழு சம்பவத்தையும் வீடியோவில் பதிவு செய்தனர்.

கெக்கிராவ நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் உள்ள தனது அலுவலக அறையின் உரிமை தொடர்பான பொய்யான ஆவணங்களை தயாரித்ததாக கூறப்படும் சட்டத்தரணி, கெக்கிராவ மாவட்ட நீதிமன்றத்தில் தமக்கு எதிரான வழக்கு தொடர்பான அசல் ஆவணங்களை மென்று விழுங்க முயற்சித்துள்ளார்.

கெக்கிராவ நீதிமன்றில் கடமையாற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவருக்குச் சொந்தமான கெக்கிராவ நீதிமன்றத்திற்கு எதிரே உள்ள அவரது அலுவலகத்தில் மற்றுமொரு சட்டத்தரணி நீண்ட காலமாக அறையொன்றை வாடகைக்கு எடுத்திருந்தார். இந்த அறையை மீட்டுத் தருமாறு அந்த அறையின் உரிமையாளர் கோரிக்கை விடுத்தும், அந்த பெண் சட்டத்தரணி இடத்தை காலி செய்ய மறுத்துவிட்டார். எனவே, அறை உரிமையாளர் கெக்கிராவ மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அப்போது, அந்த அறையை ஆக்கிரமித்திருந்த பெண் சட்டத்தரணி, கட்டட உரிமையாளரான சட்டத்தரணியின் கடிதத் தலைப்பில் போலி கையெழுத்து போட்டு, 2 மில்லியன் ரூபாய்க்கு விற்றதாக இரண்டு மோசடி ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி கையொப்பங்கள் தம்முடையவையல்ல. எனவே சரிபார்க்கப்படவேண்டும் என சிரேஷ்ட சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

நீதிமன்ற உத்தரவுக்கு இணங்க, கையொப்பம் சரி பார்ப்பதற்காக அரசு ஆய்வாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. இதற்கிடையில், விசாரணையின்போது, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விதத்தில் குறைபாடு இருப்பதாக நீதிமன்றம் கூறியதால், பாதிக்கப்பட்ட தரப்பினர் வழக்கை வாபஸ் பெற்றனர்.

இதற்கிடையில், கையொப்பங்கள் தொடர்பில் அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அறிக்கை கிடைத்தது. அதில் கையொப்பங்கள் பொருந்தவில்லை என்றும், எனவே அவை போலியானவை என்றும் நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.

இந்த அறிக்கை வந்தவுடன், பாதிக்கப்பட்ட தரப்பினர் அசல் ஆவணங்களின் நகல்களைப் பெற்றனர். பொய்யான ஆவணங்களைத் தயாரித்தது தொடர்பாக தன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதை உணர்ந்த பெண் சட்டத்தரணி, இந்த இரண்டு ஆவணங்களையும் வெளியிட நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் பதிவு அலுவலகத்துக்குச் சென்றுள்ளார். ஆவணங்களை கையில் எடுத்ததும் இரண்டு ஆவணங்களையும் கிழித்து வாயில் போட்டு மெல்ல ஆரம்பித்தார். இந்த முழு சம்பவத்தையும் பதிவு செய்த நீதிமன்ற ஊழியர்கள், கெக்கிராவ பொலிஸில் முறைப்பாடு செய்ய, அங்கு வந்து சட்டத்தரணி ஆவணத்தை மெல்லும் போது கைது செய்தனர். (அ)

# நெடுந்தீவில் குதிரைகளுக்கு தேவையான நீர் நிரப்பப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 16

நெடுந்தீவில் குதிரைகள் நீரின்றி அலையும் தகவல் சமூக ஊடகங்களில் பரவியதையடுத்து, அங்குள்ள தொட்டிகளில் நீர் நிரப்பும் நடவடிக்கை நேற்று முன் தினம் இரவே மேற்கொள்ளப்பட்டது.

குதிரைகளுக்கு தேவையான நீரை கடந்த சில நாட்களாக வழங்காததால், குதிரைகள் நீர் அருந்தும் தொட்டிகள் காய்ந்து போயிருந்தன. இதனால் குதிரைகள் நீர் தேடி அலைந்து கொண்டிருந்தன.

அந்த பகுதிக்கு வேறு தேவைகளுக்காக செல்பவர்களின் வாகனங்களையும், குடிதண்ணீர் நிரப்பும் வாகனங்களென நினைத்து குதிரைகள் ஓடிவந்து, ஏமாற்றத்துடன் திரும்பி செல்வதாக சமூக வலைத்தளங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், யாழ் மாவட்ட செயலாளரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து, நேற்று முன் தினம் இரவே அங்குள்ள தொட்டிகளில் நீர் நிரப்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (அ)

# குடிதண்ணீருக்கு 35 வருடங்களாக போராடும் கண்ணகி நகர் மக்கள்!

கிளிநொச்சி, ஓக. 16

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்ணகிநகர் பகுதியில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் 35 வருடங்களாக அவர்கள் சுத்தமான குடிதண்ணீரை பெற முடியாமல் தவித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பலர் நீண்ட நாட்களாக நோய்த்தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுவருவதாகவும், எனினும் இதற்கான தீர்வு இது வரை எட்டப்படவில்லை எனவும் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

அத்துடன்தமக்கு தேவையான சுத்தமான குடிதண்ணீரை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும், ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் வரும் அரசியல்வாதிகள் தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க உடன் நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்துவிட்டு போய் மறு தேர்தல் வரும்போதுதான் அவர்களை காணக் கூடியதாக உள்ளதாகவும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்நிலையில் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக ஒரு தீர்வினைப் பெற்றுத்தரவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# பெண் வேடம் அணிந்து வந்து வன்முறை கும்பல் தாக்குதல்!

## கல்வியங்காட்டில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 16

கல்வியங்காட்டில் வீடு ஒன்றின் மீது இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட வன்முறைக் கும்பல் ஆயுதங்களுடன் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டுச் சேதம் விளைவித்துள்ளது.

கல்வியங்காட்டில் உள்ள பூதரவராயர் வீதியில் உள்ள அரச உத்தியோகத்தர் ஒருவரது வீட்டின் மீது நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை பெண்களின் ஆடை அணிந்து வந்த ஒருவர் உட்பட்ட ஆயுதங்களுடன் வந்த மர்ம கும்பலே அட்டூழியத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது வீட்டின் வெளியே நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், புத்தகப்பை என்பன தீயிட்டு கொளுத்தப்பட்டதுடன் யன்னல் கண்ணாடிகள், கண்காணிப்பு கமெராக்கள் என்பனவும் அடித்து நொருக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் கண்காணிப்பு கமெராக்களில் பதிவான காட்சிகளை அடிப்படையாக கொண்டு கோப்பாய் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வெளிநாட்டில் உள்ள தரப்பே இங்குள்ள வன்முறைக் கும்பலுக்கு பணம் அனுப்பி குறித்த வன்முறையில் ஈடுபட்டதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கல்வியங்காட்டில் இவ்வாறான வன்முறைச் சம்பவம் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றபோதும் குற்றவாளிகளோ வன்முறைக் கும்பலோ கைது செய்யப்படுவதில்லை என அப்பகுதி மக்கள் பொலிஸார் மீது குற்றஞ்சாட்டுகின்றனர். (அ)

# சீனி வரி மோசடிக்கு இதுவரை தீர்வில்லை

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 16

சீனி வரி மோசடியில் ஏற்பட்டுள்ள நஷ்டத்தை மீட்பதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என நிதி அமைச்சிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் நடைபெற்ற பொது நிதி தொடர்பான குழுக் கூட்டத்தின்போது நிதியமைச்சு நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக அவர் அதிருப்தி வெளியிட்டார்.

சட்டமா அதிபருடன் கலந்துரையாடிய உள்நாட்டு இறைவரி திணைக்களம், இது தொடர்பில் இதுவரை நடவடிக்கை எடுக்காதது ஏன் என கோப் குழு கேள்வி எழுப்பியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் வழக்கு நிலுவையில் உள்ளதால், நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் நடவடிக்கைகள் தொடரும் என சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது என நிதியமைச்சின் அதிகாரிகள் கூறினர்.

எவ்வாறாயினும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை சம்பந்தப்பட்ட தரப்பினர் வாபஸ் பெற்றால் நடவடிக்கை எடுக்க முடியுமா என கோப் குழு விசாரித்தது.

இதன்படி, உடனடியாக தெரிவிக்கப்பட்ட கவலைகள் தொடர்பில் குழுவுக்கு அறிவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் குழு கோரியுள்ளது.

மேலும் கோதுமை மாவில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குமுறைகள் தொடர்பாக முன்னர் எழுப்பப்பட்ட பிரச்னைகள் தொடர்பாக நிதியமைச்சு தெரிவிக்கத் தவறியமை குறித்தும் பொது நிதிக்கான குழு கவலைகளை எழுப்பியது.

அத்தோடு ஜூலை 18ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1969 ஆம் ஆண்டு இலக்கம் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான ஒழுங்குமுறைகளும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. (அ)

# முல்லைத்தீவு குடும்பஸ்தர் கொழும்பில் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஓக. 16

கொழும்பில் தமிழ்க் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன் தினம் இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவைச் சேர்ந்தவரும் கொழும்பு - மகரகம பிரதேசத்தில் வசித்து வருபவருமான தனபாலசிங்கம் வைகுந்தன் (வயது 39) என்ற நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், கடந்த 7 வருடங்களாகக் குடும்பத்தினருடன் மகரகமவில் வசித்து வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிகை அலங்கார நிலையத்தில் பணியாற்றி வந்த குறித்த நபர், நேற்று முன் தினம் மாலை 5 மணியளவில் பணி முடிந்து வீடு திரும்புவதாக மனைவியிடம் தெரிவித்துள்ளார்.

எனினும், வீட்டுக்கு வருகை தராத அவரைக் குடும்பத்தினர் இரவு 7.30 மணியளவில் தேடிய போது வீட்டுக்கு அருகாமையில் சடலமாகக் கிடந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார், சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (அ)

# அரச ஊழியர்கள் ஆட்சேர்ப்பு அடுத்த வருடம் இடம்பெறாது

கொழும்பு, ஓக. 16

அரச சேவைக்கு அடுத்த வருடம் புதிய ஆட்சேர்ப்பு இடம்பெறாது என நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்தார்.

எனவே, அடுத்த வருடத்துக்கான மதிப்பீடுகளை தயாரிப்பதில் அதற்கான ஒதுக்கீடு எதுவும் வழங்கப்பட மாட்டாது என செயலாளர் கூறினார்.

அடுத்த வருடத்துக்கான சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மதிப்பீடுகள் இவ்வருடம் ஜூன் 30 ஆம் திகதி வரையான நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தயாரிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தண்ணீர் பற்றாக்குறை; 6,000 யானைகள் பாதிப்பு

கொழும்பு, ஓக. 16

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக இலங்கையின் ராஜரட்டை, கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்களில் உள்ள வனவிலங்கு காப்பகங்கள் மற்றும் ஏனைய காடுகளில் 6000 யானைகள் தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருவதாக வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நயனக ரன்வெல்ல தெரிவித்தார்.

அதன்படி, இலங்கையில் வருடாந்தம் சுமார் 450 காட்டு யானைகள் உயிரிழக்கும் நிலையில், இது கடும் வறட்சியினால் ஏற்பட்டுள்ள மற்றொரு பரிதாபகரமான நிலை என நயனக ரன்வெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த நயனக ரன்வெல்ல,

உடவளவ பூங்காவில் அமைந்துள்ள காடுகள் மற்றும் மகாவலி ஆற்றின் அனைத்துப் பகுதிகளிலும் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், அது யானைகளுக்கு நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்துகிறது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, ஒவ்வொரு வருடமும் இந்த வறட்சி காலம் வருவதால், வனவிலங்கு திணைக்களம் வாழ்விடங்களை முகாமைத்துவம் செய்வதற்கும், மேய்ச்சல் நிலங்களை உருவாக்குவதற்கும், கிராமங்கள் மற்றும் வனப் பூங்காக்களை சுற்றி மின்சார வேலிகள் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அகில இலங்கை வனவிலங்கு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் பிரபாஷ் கருணாதிலக்க தெரிவித்தார்.

சில யானைகள் இடம்பெயர்ந்த பாதைகள் தடுக்கப்பட்டுள்ளன. அந்த இடங்களில் இருந்து யானைகள் கிராமங்களைத் தாக்கி விவசாயிகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவும் அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதாகவும் அவர் கூறினார்.

யானைகள் நடமாட்டம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு வழங்கினால், காட்டு யானைகளினால் ஏற்படும் உயிரிழப்புகளையும், யானைகளினால் மனிதர்களுக்கு ஏற்படும் சேதங்களையும் 90 வீதம் குறைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# 11 ஆயிரம் வீடுகளுக்கு சோலர் மூலம் மின்சாரம்

கொழும்பு, ஓக. 16

சூரிய ஒளி மின்சாரத் திட்டத்தின் கீழ், அரைவாசிப் பணிகள் நிறைவடைந்த 11,000 வீடுகள் மின்சார விநியோகத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த 11,000 வீடுகள் அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 15 திட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளன.

குறைந்த வருமானம் பெறும் 25,000 வீடுகளுக்கு சோலார் பேனல்கள் மூலம் மின்சாரம் வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

பாதி கட்டி முடிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் 25,000 வீடுகளை தேர்வு செய்து அந்தந்த வீடுகளை பூரணப்படுத்தி சோலார் பேனல்கள் அமைக்க முன்மொழியப்பட்டது. இதுவரை தெரிவு செய்யப்பட்டுள்ள 11,000 பாதி கட்டி முடிக்கப்பட்ட வீடுகளுக்கு மேலதிகமாக மேலும் 14,000 வீடுகளும் இந்த நாட்களில் தெரிவு செய்யப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் ஊடாக 25,000 வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவது மட்டுமின்றி, 500 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க சக்தியை தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# கொழும்பு வைத்தியசாலையில் திடீரென ஏற்பட்ட மின்சார தடை

## தொழில்நுட்ப கோளாறே காரணம்

கொழும்பு, ஓக. 16

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட திடீர் மின் தடைக்கு தொழில்நுட்ப கோளாறே காரணமென விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வைத்தியசாலையின் ஒரு பகுதிக்கு மின்சாரத்தை விநியோகிக்கும் மின் கம்பியில் ஏற்பட்ட சேதத்தினால் சில மணித்தியாலங்கள் மின் தடை ஏற்பட்டிருந்ததாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியர் குமார விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதன் காரணமாக வைத்தியசாலையில் நேற்று முன் தினம் சில சத்திரசிகிச்சை பிரிவுகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், தடைகளுக்கு மத்தியிலும் சத்திரசிகிச்சைகளை நிறைவு செய்ய முடிந்ததாக வைத்தியர் குமார விக்கிரமசிங்க கூறினார்.

மின்சார சபை ஊழியர்கள் உடனடியாக வருகை தந்து மின் விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவந்ததாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# 5 நிறுவனங்களில் உச்சக்கட்ட ஊழல்?

கொழும்பு, ஓக. 16

அரச நிறுவனங்கள் ஐந்தில் அதிகபடியான ஊழல் இடம்பெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை சுங்கம், மதுவரைத் திணைக்களம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், இறைவரித் திணைக்களம் மற்றும் ரயில் திணைக்களம் ஆகிய ஐந்து அரச நிறுவனங்களில் இவ்வாறு ஊழல் இடம்பெறுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தவறான நடைமுறைகளை தடுப்பதற்கு குறித்த நிறுவனங்களின் செயற்பாடுகளை இலத்திரனியல் மயமாக்குவதன் மூலம் அரச வருமானத்தை 50 வீதத்தினால் அதிகரிக்க முடியுமென கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அரச துறைகளில் இடம்பெறும் திருட்டு, முறைகேடுகள், ஊழல், மோசடிகளை தடுப்பதற்கு அரச துறையை டிஜிற்றல் மயமாக்குவதே ஒரே வழி என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன முன்னதாக தெரிவித்திருந்தார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் பல்வேறு வடிவங்களில் எதிர்ப்புகள் காணப்படுகின்றபோதும் மோட்டார் போக்குவரத்து துறையினை டிஜிற்றல் மயமாக்குவதற்கு கடுமையான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, நாட்டுக்கு வருமானத்தை ஈட்டித்தரும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள குறித்த ஐந்து நிறுவனங்களிலும் ஊழல் மற்றும் மோசடி நிறைந்துள்ளதன் காரணமாக அரச வருமானத்தை அதிகரிக்க முடியாது என விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. (அ)

(அ)





# தலைசிறந்த 20 விஞ்ஞானிகளில் இரு இலங்கையர் உள்ளடக்கம்!

கொழும்பு, ஓக. 16

சீனாவின் உயர்மட்ட நுண்ணுயிரியல் நிபுணர்களின் தரவரிசையின்படி, இரண்டு இலங்கை விஞ்ஞானிகள் 11ஆவது, 15ஆவது இடங்களை பெற்றுள்ளனர்.

பேராசிரியர் லக்ஷ்மன் சமரநாயக்க 11ஆவது இடத்தையும், பேராசிரியர் மாலிக் பீரிஸ் 15ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

"றிசேர்ச்.கொம்" நடத்திய ஆய்வின்படி இத்தரவரிசை பெறப்பட்டுள்ளது.

இந்த இரண்டு பேராசிரியர்களும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களாவர்.

அவர்களின் நுண்ணுயிரியல் மருத்துவப் பணிகளுக்காக உலகப் புகழ்பெற்றவர்கள்.

மருத்துவ ஆராய்ச்சிக்கான அவர்களின் பங்களிப்புகளுக்காக பேராதனைப் பல்கலைக்கழகத்தால் கௌரவ கலாநிதிப் பட்டங்களை பெற்றுள்ளனர்.

பேராசிரியர் சமரநாயக்க ஹொங்கொங் பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாகவும் உள்ளார். அவரது தலைமையின் கீழ் கியூ. எஸ் உலக பல்கலைக்கழக தரவரிசைகளின்படி 2015 இல் உலகின் முதல் பல் மருத்துவப் பாடசாலையாக விளங்கியது. (அ)

# சமனலவெவ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் குறைவடைகின்றது

கொழும்பு, ஓக. 16

சமனலவெவ நீர்த்தேக்கத்தில் தற்போதுள்ள நீர் இன்னும் 4 நாட்களுக்கு மாத்திரமே போதுமானதாகும் என அந்த நீர்த்தேக்கத்திற்கு பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 3.9 சதவீதமாக குறைவடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

எவ்வாறாயினும், குறித்த பகுதியில் உள்ள சில விவசாயிகளுக்கு இன்னும் நீர் கிடைக்கப் பெறவில்லை என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாயிகள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் காரணமாக, சமனலவெவ நீர்த்தேக்கத்தில் இருந்து உடவளவ நீர்த்தேக்கத்திற்கு நீரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எனினும், தொடர்ச்சியாக நிலவும் வறட்சியுடனான காலநிலை காரணமாக, சமனலவெவ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் மேலும் குறைவடைந்து வருகின்றது. (அ)

# சிறுவர்களிடையே வேகமாக பரவிவரும் சின்னமுத்து நோய்

கொழும்பு, ஓக. 16

நாட்டில் தற்போது சின்னமுத்து நோய் சிறுவர்களிடையே வேகமாக பரவிவருவதானால் குழந்தை பிறந்து 09 மாதங்கள் மற்றும் 03 வயதில் போடப்படும் தடுப்பு ஊசி ஏற்றிக்கொள்ளாதவர்கள் உடனடியாக ஏற்றிக் கொள்ளுமாறு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனை அடுத்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

திங்கட்கிழமைகளில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையிலும், செவ்வாய்க்கிழமைகளில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலும், புதன்கிழமைகளில் சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் அமைந்துள்ள சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திலும் குறித்த தடுப்பு ஊசியை ஏற்றிக்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.

# ஆழ்கடலில் புதிய பவளப் பாறைகளின் கண்டுபிடிப்பு

## சிதம்பரம் இரவிச்சந்திரன்

உயரும் புவி வெப்பத்திற்கு இடையிலும் உயிர்த்துடிப்புடன் வாழும் புதிய ஆழ்கடல் பவளப்பாறைக் கூட்டத்தை இதுவரை ஆராயப்படாத காலப்பெகோஸ் **(Galapagos)** கடல்வளப் பாதுகாப்பு பகுதியில் **(Marine Protection Area MPA)** ஆழ்கடலில் மூழ்கி பயணம் செய்யும் வசதியுடைய வாகனத்தில் **(Human Occupied Vehicle HOV)** பயணம் செய்து விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதுவரை வரைபட வசதி ஏற்படுத்தப்படாத வளைகுடாவின் மத்திய பகுதியில் உள்ள கடல் மலைகளின் சிகரங்களை 6500 மீட்டர்-1970 அடி ஆழத்தில் ஆராய்ந்து கொண்டிருந்தபோது பல உயிரினங்கள் ஒன்று சேர்ந்து வாழும் புதிய பவளப்பாறைத் திட்டுகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சாதனையளவு புவி வெப்ப உயர்வு மற்றும் அதிகரிக்கும் கடல் அமிலத் தன்மையால் உலகில் மற்ற இடங்களில் பவளப் பாறைகள் அழிந்து கொண்டிருக்கும்போது ஆரோக்கியமான பவளப் பாறைகள் பாதகமான சூழ்நிலையை சமாளித்து வாழ முடியும் என்ற புதிய நம்பிக்கையை இக்கண்டுபிடிப்பு விஞ்ஞானிகளுக்கு ஏற்படுத்தியுள்ளது.

**அரிய உயிரினங்களின் வியக்க வைக்கும் காட்சி**

சூழல் பாதுகாப்புத் திட்டங்களின் திறம்பட்ட செயல்பாடு, பலன் தரும் மேலாண்மையால் அழியும் உயிரினங்களைப் பாதுகாக்கலாம் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இங்கு பிங்க் நிற நீராளிகள், வௌவால் மீன்கள், குந்து இரால், பல இன ஆழ்கடல் மீன்கள், சுறாக்கள், கதிர் மீன்கள் மற்றும் பல உயிரினங்கள் வாழ்கின்றன என்று இந்த ஆழ்கடல் ஆய்வுப் பயணத்தின் இணைத் தலைவர் மற்றும் எசெக்ஸ் பல்கலைக்கழக கடல் உயிரியலாளர் டாக்டர் மிஷைல் டைலர் கூறுகிறார்.

இருவர் மட்டுமே பயணம் செய்யும் வசதியுடைய ஆல்வின் என்ற இந்த ஆழ்கடல் மூழ்கு ஆய்வு வாகனம் 600 மீட்டர் ஆழம் வரை பயணம் செய்யக் கூடியது.

இந்த வாகனத்தின் தானியங்கிக் கைகள் பவளப்பாறைகளில் குளிர்ந்த நீரால் சூழப்பட்ட கூடை நட்சத்திர வகை உயிரினங்கள், கடல் முள் எலிகள், குந்து இறால், கடினஓடற்ற பாலிப்ஸ் என்ற பூ போலத் தோன்றும் பவளப் பாறைகளில் காணப்படும் உயிரினங்களான அனெமனிஸ் போன்ற பல ஆழ்கடல்வாழ் உயிரினங்களின் மாதிரிகளை சேகரித்தது. இது ஊக்கமளிக்கும் செய்தி என்று ஈகுவேடார் நாட்டின் சூழல் அமைச்சர் ஹோசே அண்டோனியோ டாவலோஸ் கூறுகிறார். காலப்பெகோஸ் தீவுக் கூட்டம் ஈகுவேடார் நாட்டிற்குச் சொந்தமானது.



**புதிய கடல்வளப் பாதுகாப்பு பகுதி**

வடபகுதியில் உள்ள பனாமா, கோஸ்ட்டரிக்கா, கொலம்பியா நாடுகளுடன் இணைந்து புதிய பிராந்திய கடல் பாதுகாப்புப் பகுதியை உருவாக்கும் முயற்சியில் ஈகுவெடோர் இப்போது ஈடுபட்டுள்ளது. டைலர் மற்றும் ஈகுவெடோர் சார்ல்ஸ் டார்வின் அறக்கட்டளையைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் ஸ்டூவர்ட் பேங்க்ஸ் ஆகியோரால் இயக்கப்பட்ட இந்த வாகனம் உயர் தொழில்நுட்பத்திறன் பெற்ற மாதிரி சேகரிக்கும் ஆற்றல் மற்றும் உயர் 4வீதம்காணொளி பிம்பமாக்கும் திறன் உள்ளிட்ட படமெடுக்கும் நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டது.

இந்த ஆய்விற்கு முன்பு காலப்பேகோஸ் வளைகுடாவின் வட கோடியில் இருக்கும் டார்வின் தீவின் வடக்கில் உள்ள வெலிங்டன் தீவில் மட்டுமே 1982-83ல் ஏற்பட்ட எல் நினோ என்னும் கடல் நீரோட்ட மாறுதல் நிகழ்வால் பாதிக்கப்படாத ஆழ்கடலில் தேங்கியிருக்கும் நீரில் வாழும் பவளப் பாறை உயிரினங்கள் வாழ்கின்றன என்று கருதப்பட்டது.

**பல ஆண்டு பழமை**

காலப்பெகோசின் கடல் பாதுகாப்பு பகுதியில் ஆழ்கடலில் இங்கு மட்டுமே காணப்படக் கூடிய செழுமை மிக்க பல ஆழ்கடல் உயிரினங்களை வாழ வைக்கும் இந்தப் பவளப் பாறைத் திட்டுகள் பல நூறாண்டுகளாக இங்கு இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

சுரங்கத்திற்குள் வழிகாட்டும் கனெரிப் பறவை போல இங்கு வாழும் பவளப் பாறைகள் உலகளவில் முக்கியத்துவம் வாய்ந்தவை. காலநிலை மாற்றத்தை சமாளித்து வாழும் இவற்றின் திறன் சூழல் சீர்கேட்டிற்கு எதிரான மனித குலத்தின் போராட்டத்திற்கு உதவும். இது கடல் பாதுகாப்பு பகுதிகளில் நடைபெறும் கார்பன் சுழற்சி மற்றும் மீன் வளம் குறித்து புரிந்து கொள்ள உதவியாக இருக்கும். உலகின் மற்ற பகுதிகளில் ஆழ்கடல் பவளப் பாறை திட்டுகள் மனிதனால் இன்னும் ஆராயப்படாமல் இருக்கலாம்.



**எல்லைகள் தாண்டி கடல்வளப் பாதுகாப்பு பகுதி**


ஹெர்மென்டாட் என்ற புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள கடல்வளப் பாதுகாப்புப் பகுதி ஈகுவெடோர் கடற்பகுதியில் இருக்கும் கடல் மலைத்தொடர்களையும் கோஸ்ட்டரிக்காவில் உள்ள கோகோ தீவில் உள்ள தேசியப் பூங்காவையும் இணைக்கிறது. இது இப்பகுதியின் கடல் உயிர்ப்பன்மயத் தன்மையை பாதுகாக்க உதவும் என்று நம்பப்படுகிறது.

**வலசை செல்லும் பாதைகள்**

கடலுக்கு அடியில் இருக்கும் மலைகள், கடல் வாழ் உயிரினங்களுக்கு வலசை செல்லும் பாதைகள். இவை அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும். ஆழ்கடல் பகுதி எண்ணற்ற கடல் உயிரினங்களின் தீவனப் பகுதி. இவை மிதமிஞ்சிய மீன் பிடித்தலால் அழிந்து விடக்கூடாது என்று விஞ்ஞானிகள் வலியுறுத்துகின்றனர். 2030ம் ஆண்டிற்குள் 30 வீதம் கடற்பரப்பை பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கும் சமீபத்திய மாண்ட்ரீல் உலக கடல் சார் உயிர்ப் பன்மயத்தன்மை மாநாட்டில் எடுக்கப்பட்ட 30x30 என்ற திட்டத்தின் மற்றொரு திருப் புமுனை இது என்று கருதப்படுகிறது.

ஆல்வின் என்ற இந்த வாகனம் அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமானது. தேசிய ஆழ்கடல் ஆய்வுத்திட்ட அமைப்பினால் நிதியுதவி செய்யப்படும் இது யு எஸ் அறிவியல் அறக்கட்டளையின் ஒரு பகுதி. இந்த வாகனம் வுட்ஸ் ஹோல் கடல் ஆய்வுக் கழகத்தால் இயக்கப்படுகிறது. யு கே இயற்கைச்சூழல் ஆய்வுக் கவுன்சில் அமைப்பும் இதற்கு நிதியுதவி செய்கிறது. அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான வுட்ஸ் ஹோல் கழகம் இயக்கும் ஆர்வி அட்லாண்டிஸ் என்ற மற்றொரு ஆழ்கடல் மூழ்கு கலனில் நடைபெறும் 2023 பன்னாட்டு விஞ்ஞானிகளின் காலப்பெகோஸ் ஆழ்கடல் ஆய்வுப்பயணத் திட்டக் குழுவில் டைலர் மற்றும் பேங்க்ஸ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் உறுதியுடன் செயல்படுத்தப்பட்டால் கடலின் மழைக்காடுகள் என்று அறியப்படும் பவளப் பாறைகள் காப்பாற்றப்படும் என்பதற்கு இந்த கண்டுபிடிப்பு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. ஆழ்கடல் ஆய்வுகளை இன்னும் தீவிரமாக மேற்கொள்ள விஞ்ஞானிகளுக்கு இக்கண்டுபிடிப்பு புதிய உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# பல்லவராச்சியம்!

பிரதீபா சிவநாதன்

ஆரம்பகாலத்தில் சிங்களம் என்னும் சொல் தென்னிலங்கையில் வசித்து வந்த ஒரு குழுவினரையே குறித்தது எனஆர்.எல்.ஏ.எச். குணவர்த்தனா குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய மற்ற குழுவாக தமிழர்கள் தென்னிலங்கையில் வாழ்ந்திருந்தனர். (அநுராதபுரி) ஆனுர்புரி என்றால் நந்திக்கொடி பறக்கும் நகர் (குடுமியான்மலை கல்வெட்டு.)

அநுராதபுரத்தில் வாழ்ந்த தமிழர்களே யார் மன்னனாக வரவேண்டும் என்பதனை தீர்மானித்ததாகச் சூளவம்சம் கூறுகிறது. தமிழர்கள் பெரும்பான்மையாகவும் பலத்துடனும் வாழ்ந்திருந்ததால் அவ்வாறு செய்ய முடிந்துள்ளது. அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட மண்படை ஆராய்ச்சிமுதல் மண்படை கி.மு. 4500 ஆண்டுக்குரிய செயற்கை நீர்த்தேக்கம் இருந்துள்ளதைச் சுட்டிக்காட்டுகிறது. அக்காலத்தில் அங்கே தமிழர் ஆட்சி நிலவியுள்ளது. கி.மு 1000 ஆண்டில் அநுராதபுரத்தில் கதம்ப நதிக் கரையில் தமிழ் நாகர்களின் தலைநகர் இருந்துள்ளது. அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அது முந்திய அசுரபுரி என்ற தலைநகர் தொடர்ச்சியாக கி.மு 4500 முதல் தமிழர் ஆட்சி இடம் பெற்றிருந்ததை இது காட்டுகிறது. கிபி 6ம் நூற்றாண்டிற்குரிய அனுராதபுர சைவத் தமிழ் சாசனம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் பெருமளவில் வாழ்ந்து சைவ சமயத்தை வளர்த்துள்ளதைக் காட்டுகின்றது. கிபி 1679ல் றோபேட் நொக்ஸ் என்ற ஒல்லாந்தபடை அதிகாரி கண்டி அரசனின் சிறையில் 18 வருடம் இருந்து தப்பி ஓடி வந்த வேளையில், அநுராதபுரத்தில் சிங்களத்தில் அவன் உரையாடியபொழுது அங்கிருந்தவர்களினால் அதை விளங்கிக்கொள்ளமுடியவில்லை. அவர்கள் சிங்களவர்களிலிருந்து வேறுபட்ட இனத்தவர்களாக காணப்பட்டார்கள். அவர்களின் தாய் மொழியாக தமிழ்மொழி இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். எனவே 17ம் நூறாறானடில் அனுராதபுரியில் தமிழ் மக்களே வாழ்ந்துள்ளனர். 18ம் 19ம் நூற்றாண்டில் குல சேகரம். வைரமுத்து வன்னி அரசர்களால் நுவரகலாவிய என்ற அநுராதபுர பிரதேசம் ஆட்சி செய்யப்பட்டது.

சத்தாதீசனின் தமிழ்க் கல்வெட்டு பொன்னன் வெளியில் காணப்பட்ட தீர்த்தக்குளம் திகவாபி ஆக மாற்றப்பட்டுள்ளது. பட்டிப்பளை ஆறு கல்லோயா ஆக மாற்றப்பட்டு, சிங்களக் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்ட போது, மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியைப் பிரித்து அம்பாறை மாவட்டம் என பெயரிடப்பட்டது.

தமிழில் வாவி என்னும் சொல்லே சிங்களத்தில் வாபி என்றும், வேவ என்றும் அழைக்கப் படுகிறது. இது நடுக்காடுப்பற்று பிரதேசத்தில் அமைந்துள்ளது. இங்கு தொன்றுதொட்டு தமிழர்களே விவசாயம் செய்து வந்தனர்.

1952ல் நிகழ்ந்த பௌத்த, முஸ்லிம் கலவரத்தினால் தமிழர்களும் வெளியேற நேர்ந்தது. கொண்ட வெட்டுவானில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்குரிய தமிழ்ப்பிராமிக் கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது. துட்ட காமினி தம்பியான சத்ததீசனால் தமிழில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு இதுவாகும். துட்ட கைமுனுவும். சத்ததீசனும் தமிழர்கள் என்பது இதனால் தெரிகின்றது.

கலிங்கர் வருகை இந்தியாவில் குப்தவம்ச அரசன் காலமான கி.பி. ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகளில் பௌத்தர்கள் கொல்லப்பட்டார்கள், சித்திரவதை செய்யப்பட்டார்கள், கொடுமை.

குரூரங்களுக்கு ஆளாக்கப்பட்டு மிலேச்சத்தனமாக ஆங்காங்கே பழிவாங்கப்பட்டபோது. உயிருக்கு அஞ்சி. பல்லாயிரக்கணக்கான பௌத்தர்கள் வட இந்தியாவிலிருந்து தெற்கே தப்பி வந்தனர். பீகார், ஒரிசா வங்காளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த பௌத்தர்கள் பயந்து, கலவரமடைந்து ஒழிந்து. உயிரைக் காப்பாற்றி இலங்கையில் வந்து குடியேறினர் என்று ம.க. அந்தனிசில் (13.12.1998 வீரகேசரி) தெரிவித்துள்ளார். மேலும் அவர்கள் வடக்கிலும், கிழக்கிலும் வாழ்ந்த தமிழ்ப் பௌத்தர்களின் வரலாற்றை இருட்டடிப்புச் செய்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மகாவம்சத்தை எழுதிய மாநாம தேரரும் அப்பொழுது தப்பிவந்த ஒருவரே. அவர்களுக்கு இந்தியாவில் இழைக்கப்பட்ட கொடுமையான. குரூரமான சித்திரவதைகளின் வேதனைகள் அவர்களின் மனதில் உறைந்து போய்விட்டது. முதலில் இக்காலத்தில் தான் பௌத்தர்கள் கதியற்றவர்களாக ஒளிவுமறைவாக வந்து களவாகக் குடியேறினார்கள். அதனால் தானோ என்னவோ மாநாமரின் எழுத்துக்களிலும் கொடுமையான குரூரமான சிந்தனைகள் இழையோடிக் காணப்படுகிறது. மீண்டும் கி.பி. 10ம், 11ம். 12ம் நூற்றாண்டுகளில் இஸ்லாமியர்கள் படை எடுத்து வந்து கலிங்கம், மகதம், வங்காளத்தில் பௌத்தத்தை பெருமளவில் சிதைத்தனர். பௌத்த மடாலயங்களும் அழித்து நிர்மூலமாக்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான பௌத்த குருமார்கள் அவர்களது மடாலயங்களில் வைத்துக் கொலை செய்யப்பட்டார்கள். பலர் உயிருடன் எரிக்கப்பட்டார்கள். பௌத்தப் பள்ளிகள் சூறையாடப்பட்டன. பீகார் ஆயிரமாண்டுகளுக்கு மேலாக பௌத்தமதக் கல்வியையும் பௌத்த கலாசாரத்தினையும் போதித்து வந்ததாகும், ஒரேசமயத்தில் 40000 மாணவர்களைக் கொண்டிருந்த உலகின் மிகப்பெரிய நாலந்தா பல்கலைக்கழகம் 197ல் முஸ்லிம்களினால் அழிக்கப்பட்டது. விலைமதிக்க முடியாத இலக்கிய செல்வங்களான நூல்களும் அழிக்கப்பட்டன. உலகத்திற்கு பேரிழப்பாகும் என டாக்டர் எஸ் தியாகராசா (வீரகேசரி 24.8.05) தெரிவித்துள்ளார். முஸ்லிம்களின் கொடுமை கொலை குரூரங்களைத் தாங்க முடியாத நிலையில் உயிரைக்காப்பாற்றி கொள்வதற்காக கலிங்கத்தினிலிருந்து பௌத்த குருமார்கள். கலிங்க அரசர்கள்.

அரச வம்சத்தவர்கள் எல்லாவற்றையும் இழந்து உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு களவாக தோணிகளில் இலங்கைக்கு வந்து சேர்ந்தனர். இது இரண்டாம் வருகையாகும். ஏற்கனவே தப்பி வந்தவர்கள் இங்கு பாதுகாப்பாக வாழ்ந்ததால், அவர்களும் கதியற்றவர்களாக இங்கு வந்தனர். இங்குள்ள பௌத்த பிக்குமாரும் பௌத்தர்களுமாக வந்தேறுகுடிகளை ஆதரித்தனர்.

இலங்கையர் பலர் இருந்தபோதும் பௌத்த குருமார் பௌத்தமத வளர்ச்சிக்காகவே இந்தியாவிலிருந்து வந்த கலிங்கர்களை தென் இலங்கையில் அரசராக்கினர். மேலும் கலிங்கர்களான பௌத்த குருமார் தமது பாதுகாப்பிற்காகவும் கலிங்கர்கள் அரசராவது நல்லது என எண்ணியே அவ்வாறு செய்தனர்.

தென்னிலங்கையில் சிங்கள அரசவம்சம் ஒன்று இல்லாத காரணத்தினால் அந்நிய நாட்டவரான கலிங்கர்கள் அரசர் ஆக வரமுடிந்துள்ளது. தென்னிலங்கையில் சோழர், பாண்டியர் ஆட்சிக் காலங்களில் (10-12 நூற்றாண்டு கலிங்கர்களும், மகதர்களும் இலங்கைக்கு வந்தனர். கலிங்க மன்னர்களின் விபரம். மகிந்தன் 956 - 972 ஆண்டு வரை விஜயபாகு கி.பி.1055 - 1110 ஆண்டு வரை விக்கிரமபாகு கி.பி 16 - 1137 ஆண்டு வரை நிசங்கமல்ல கி.பி 1187 - 1196 ஆண்டு வரை விக்கிரமபாகு 1196 - 1200 தென்னிலங்கையில் ஆட்சி செய்தனர்.

மேலும் கல்யாணவதி வீரபாகு, சோடகங்கன் ஆகியோர் படையெடுப்பின் காரணமாக வந்தனர். இதனால் கலிங்கப் பெயர்களான நிசங்க, விஜய, மகிந்த, விக்கிரம, திரிலோக சுந்தரி, லீலாவதி. சுந்தரி ஆகிய பெயர்கள் சிங்களவர் மத்தியில் நிலை கொண்டுள்ளன.

கலிங்கர்கள் இந்திய திராவிட இனத்தவர் ஆவர். கி.பி. 956ல் வந்த கலிங்க இளவரசன் மகிந்தன் பௌத்த சமயத்தை இங்கு பரப்பினான். கி.பி.1055ல் வந்த விஜய என்ற கலிங்க மன்னன் இங்கு அரசனானான்.

விஜய மகதத்திலிருந்து வந்தவன் என்றும் வேறு கருத்து உண்டு. சிங்களவர் என்று பூரண அடையாளம் பெறத் தொடங்கியது கி.பி.1200 அளவில் தான் என்று பேராசிரியர் இந்திரபாலா தெரிவித்துள்ளார்.


அழகேசுவரனின் அழகேசுவரன் கோட்டை என்பது கோட்டை இராசதானியாகும்.

கம்பளை மன்னன் விக்கிரமபாகுவின் இனத்தவனும், கம்பளை அரசில் படைத்தலைவனாகவும், மந்திரியாகவும் இருந்தவனுமான அழகக்கோன் அல்லது அழகேசுவரன் என்பனை மன்னனாக்குவதற்காக கி.பி 1406 கோட்டை ராச்சியம் அமைக்கப்பட்டது. தொடர்ந்து செண்பகப்பெருமாள் போன்ற அரசர்களல் ஆட்சிசெய்யப்பட்டு வந்தது. சுனித்திராதேவி தமிழரசி மருமகள் தமிழரசி, பேத்தி தமிழரசி என்று தமிழர்களின் ஆட்சியிலிருந்த காரணத்தினால் கோட்டை இராசதானியில் தமிழ் அரச மொழியாக இருந்துள்ளது. எச். டபிள்யூ. கொட்றிங்ரன்'சிலோன்" என்ற நூலில் கோட்டை அரசினை ஆண்ட மன்னர்களது அரசமொழியாக தமிழ் மொழியே இருந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அழகக்கோன் முதலாக தருமபாலன் வரை கோட்டையை ஆண்ட மன்னர்கள் எல்லோரும் தமிழர்களே. அழகக்கோன் கோட்டை அமைந்த இடம் ஜெயவர்த்தன புரமாகும். இலங்கையில் அகழ்வாராச்சிகளில் தென்கரை வளவகங்கை பகுதி, கிழக்குக் கரை கதிரவெளி, மேற்குக் கரை பொன்பரிப்பு மாதோட்டம் மாந்தை, வடக்குக்கரை வல்லிபுரம், மத்திய இலங்கையின் வவுனியா, அநுராதபுரம், முதலிய இடங்களில் தமிழர்களின் ஈமச்சின்னங்களாகிய முதுமக்கட்தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கோட்டகம சங்கிலிக்கான தரவை. பாண்டுவாசநகர். மாத்தளை, கந்தப்பளை, புதுமட்டவாவி, முதலிய தென்னிலங்கை ஊர்களில் பழைய தமிழ் கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மற்றும் வரலாற்றுக்காலத்திற்கு முற்பட்ட சிவாலய இருப்பிடங்களையும். அவற்றின் பின்னைய வரலாற்றினையும் ஆராயு மிடத்து இந்நாடு தமிழ் இலங்கையான சிவபூமியே என்று தி.க.இராசேசுவரன் (5ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு மலர்) தெரிவித்துள்ளார். கி.பி. 13ம் - நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வீரசோழியம் என்ற தமிழ் இலக்கணநூல் இந்திய தமிழ் பௌத்த பிக்கு மூலம் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு சித்தசங்கராவ என்ற பெயரில் சிங்களமொழி இலக்கணமாக உள்ளது தமிழ் வைத்திய சிந்தாமணி என்ற நூலை செயசிங்கம் என்ற தமிழ் வைத்தியர் சிங்களத்தில் மொழிபெயர்த்து சிங்கள வைத்திய நூலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. (ஆதாரம்: பல்லவராச்சியம்) (முகநூலில் இருந்து)

பல்லவராச்சியம்



# 11 ஆயிரம் மருந்துகளுடன் சந்தேகநபர் கைதானார்!

கொழும்பு, ஓக. 16

சட்டவிரோதமாக விற்பனைக்கு தயார்ப்படுத்தப்பட்டிருந்த 11 ஆயிரத்துக்கும் அதிக மருந்து வில்லைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் உணவு மற்றும் மருந்து பரிசோதனை பிரிவின் அதிகாரிகளுடன் மதவாச்சி மருத்துவமனை முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இதற்கமைய சட்டவிரோத விற்பனைக்கு தயார்படுத்தப்பட்டிருந்த 11 ஆயிரத்து 377 மருந்து வில்லைகள் கைப்பற்றப்பட்டன.

சம்பவம் தொடர்பில் மதவாச்சி பகுதியைச் சேர்ந்த 40 வயதான சந்தேகநபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

# திருவிழாவில் கைவரிசை பெண்கள் உட்பட 9 பேர் கைது

மட்டக்களப்பு, ஓக. 16

மட்டக்களப்பில் ஆலய மற்றும் தேவாலய திருவிழாக்களில் தங்க 22 பவுண் நகைகள திருடினர் என்ற சந்தேகத்தில் 4 பெண்கள் உட்பட 9 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோயில், மரியாள் தேவாலய திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திருவிழாவில் திருவிழாக்களுக்கு வருகை தந்தவர்களது தங்க ஆபரணங்கள் திருடப்பட்டன.

முறைப்பாட்டின்படி சுமார் 22 பவுண் பெறுமதியான தங்க ஆபரணங்கள் காணாமல் போயின என்று தெரிய வந்ததாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மனுஷ, ஹரீன் பெர்னாண்டோ உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல்





கொழும்பு, ஓக. 16

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான மனுஷ நாணயக்கார, ஹரீன் பெர்னாண்டோ ஆகியோர் உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மனு தாக்கல் செய்துள்ளனர்.

தங்களுடைய கட்சி உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டமை மற்றும் தம்மை பாராளுமன்றிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்டுள்ள தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்குமாறு கோரியே இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# காணிப் பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும்

## சுற்றுலா அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ

கொழும்பு, ஓக. 16

நாட்டின் சகல பகுதிகளிலும் காணி பிரச்னை நீண்டகாலமாக தீர்க்கப்படாத நிலையில் காணப்படுவதாக காணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நேரடி தலையீட்டின் கீழ் புதிய காணிக்கொள்கை மற்றும் சட்டமூலம் தயாரிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதனடிப்படையில் நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைகளுக்கும் முழு உரிமையுள்ள உறுதிப் பத்திரத்துடன் காணிகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்துள்ளார். (ஐ)

# பொலநறுவையில் வறட்சி 50,000 மாடுகள் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 16

கடும் வறட்சியான காலநிலை காரணமாக பொலநறுவை மற்றும் மகாவலி பி வலயத்தில் மேய்ச்சலுக்கு புற்கள் கிடைக்காமையால் சுமார் 50 ஆயிரம் கறவை மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பொலநறுவையில் கடந்த எட்டு மாதங்களாக மழை இன்மையால் கறவை மாடுகளுக்கான மேய்ச்சல் தரைகளில் உள்ள புற்கள் அழிந்துள்ளன.

வெலிகந்தை, திம்புலாகலை, தம்மின்ன, சிங்கபுர, எல்லேவெவ, அசேலபுர,விஜயபாபுர மற்றும் மகாவலி பி வலயத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 50இற்கும் மேற்பட்ட பால் பண்ணையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் .

இதேவேளை, வறட்சி மற்றும் கறவை மாடுகளுக்கான புற்கள் கிடைக்காமையின் காரணமாக நாளாந்தம் கிடைக்கும் பாலின் லீற்றரின் அளவும் 50 சதவீதத்திற்கும் அதிகமாக குறைந்துள்ளதாக பால் பண்ணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ)






# கல்வி, சுகாதாரத்தை தனியார் மயமாக்க இடமளிக்கமாட்டேன்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை

காரைதீவு, ஓக. 16

**கல்வியையும் சுகாதாரத்தையும் தனியார் மயமாக்க இடமளியேன் என்றும் நாட்டின் ஏழ்மை 40 இலட்சமாக அதிகரித்துவிட்டதாகவும் இதில் அரசாங்கத்துக்கு எத்தகைய அக்கறையும் இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**

நாட்டிலுள்ள அனைத்தும் ஏலம் விடப்படுவது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருவதாகவும் ரூபவாஹினி நிறுவனத்துக்குச் சொந்தமான ஐ சனலை விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ தயாராகி வருவதாக கூறப்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சுமத்தினார்.

அரச பாடசாலைகளுக்கு பஸ்கள் வழங்கும் 'பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தின் கீழ் நேற்று முன் தினம் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்துக்கு 75ஆவது பஸ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய முதலீட்டாளர்களை அரச ஊடகங்களுடன் இணைக்கும் ஒழுங்குமுறை உள்ளதாகவும் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் தமது சொந்த சொத்தைப்போல, தான் நினைத்தது போல, நினைத்த நபர்களுக்கு விற்கும் சூதாட்டம் அரங்கேறி வருகின்றது.

சம்மாந்துறை, கல்முனை, அம்பாறை மற்றும் பொத்துவில் ஆகிய நான்கு தேர்தல் தொகுதிகளும் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களினால் ஓரங்கட்டப்பட்டுள்ளன.

சம்மாந்துறை வைத்தியசாலைக்கு 30 இலட்சம் பெறுமதியான வைத்தியசாலை உபகர



ணங்கள் ஏலவே வழங்கப்பட்டுள்ளன. இலங்கை தற்போது வங்குரோத்து நாடாக மாறியுள்ளதுடன், நாட்டில் ஸ்மார்ட் வலுவை கட்டியெழுப்ப வேண்டும் என்றே எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி முன்மொழிகின்றது.

நாட்டில் 10 ஆயிரத்து 151 பாடசாலைகள் உள்ளன. பிள்ளைகள் வெவ்வேறு பாடத்திட்டங்களை கற்கின்றனர். ஆனால், அவை யாவும் பழைய பாடத் திட்டங்கள். அவை புதுப்பிக்கப்பட்டு கல்வியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஆங்கில மொழிக்கல்விக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம். மொழி ஆய்வு கூடங்கள் நிறுவப்பட வேண்டும். தகவல் தொழில்நுட்பத்துறைக்கு பிள்ளைகள் அனுப்பப்பட வேண்டும்.

ஒரு நாடாக முன்னோக்கிச் செல்வதற்கு நாம் பசுமை அபிவிருத்தியை நோக்கிச் செல்ல வேண்டும். பசுமை அபிவிருத்தியை நோக்கிச் செல்ல சுற்றுச்சூழலைப் பேணுவது அவசியமானது. நாட்டின் அபிவிருத்தி நிலைபேறானதாக இருக்க வேண்டும்.

இலங்கையில் உள்ள பாடசாலைகளில் நவீன தொழில்நுட்பப் போக்குகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கொவிட் காலத்தில் பிள்ளைகள் கற்பதற்கு கையடக்கத் தொலைபேசிகள் கூட இருக்கவில்லை. இணைய வழி தொடர்பைப் பெறுவதற்கு பிள்ளைகள் மரங்கள் மற்றும் பாறைகளில் ஏற வேண்டியிருந்தன. சிலர் மேடைகளில் ஏறி, தகவல் தொழில்நுட்பப் புரட்சியை உருவாக்க வேண்டும் என்று சத்தமாக கூறுகின்றனர். பாடசாலை மாணவர்களுக்கு கணினி வாங்கும் அளவுக்கு பொருளாதாரம் வலுவாக இல்லை.

நாட்டின் வளங்கள் 24 மணி நேரமும் விற்கப்படுகின்றன. இது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருகின்றது. ரூபவாஹினி நிறுவனத்துக்கு சொந்தமான ஐ சனலை விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ தயாராகி வருவதாக கூறப்படுகிறது.

மேலும் கல்வியையும் சுகாதாரத்தையும் தனியார் மயமாக்க இடமளியேன். நாட்டின் ஏழ்மை 40 இலட்சம் அதிகரித்து விட்டன.

இதில் அரசாங்கத்துக்கு எத்தகைய அக்கறையும் இல்லை. புதிய வளமான நாட்டை உருவாக்க, புதிய இளைஞர்களை பலப்படுத்த, நாட்டின் குடிமக்களை பலப்படுத்த அனைவரும் ஒன்றாய் கைகோர்ப்போம்- என்றார்.

(அ)

# கிழக்கு மாகாணத்தில் இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் சோலர் பனல்கள்!



திருமலை, ஓக. 16

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிற்கும் இடையிலான கலந்துரையாடல் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான சாலை வரைபடத்தைத் திட்டமிடுதல், இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் அரசு அலுவலகங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் மற்றும் மதத் தலங்களுக்கும் இலவச சோலர் பனல்களை நிறுவுவதற்கு காஞ்சன விஜயசேகர இணக்கம் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர், இலங்கை மின்சார சபையின் தலைவர், பிரதம செயலாளர், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட அரச அதிபர்கள், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ஏனைய அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

# காத்தான்குடியில் திடீர் சுற்றிவளைப்பு

## 27 பேர் மீது வழக்கு

மட்டக்களப்பு, ஓக. 16

காத்தான்குடி பொலிஸ் பிரிவில் மட்டக்களப்பு மோட்டார் போக்குவரத்து பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போது 27 பேர் சிக்கியதுடன் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மோட்டார் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை காத்தான்குடி பொலிஸ் பிரிவு உட்பட்ட காத்தான்குடி ஆரையம்பதி, நாவற்குடா, கல்லடி பிரதேசங்களில் இத்திடீர் சுற்றிவளைப்பை மோட்டார் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டனர்.

இதன்போது மோட்டார் சைக்கிள்களுக்கு அனுமதிப்பத்திரம் இல்லாமை, காப்புறுதி மற்றும் தஸ்தாவேஜூகள் இல்லாமை, தலைக்கவசம் அணியாதது போன்ற காரணங்களால் 27 பேர் பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டு இவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(அ)

# தேசிய ரீதியில் சாதனை படைத்தார் ஜினோதிகா!

காரைதீவு, ஓக. 16

கல்வி அமைச்சு நடத்திய சர்வதேச ஒலிம்பியாட் கணித போட்டியில் தேசிய மட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலய மாணவி செல்வி சிவரூபன் ஜினோதிகா தங்கப் பதக்கம் பெற்று மகத்தான சாதனை படைத்துள்ளார்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை இப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டன.

கடந்த வாரம் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நடைபெற்ற தேசிய போட்டியில் யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயம் வித்தியாலய மாணவன் ஆர்.ஆருஜன் 50 புள்ளிகளை பெற்று முதலிடத்தையும் தங்கப்பதக்கத்தையும் சுவீகரித்தார்.

45 புள்ளிகளைப் பெற்று கிழக்கு மாகாணத்தின் சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட



மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலய மாணவி செல்வி சிவரூபன் ஜினோதிகா தங்கப் பதக்கம் பெற்று இரண்டாம் இடத்தில் மகத்தான சாதனை படைத்துள்ளார்.

இது சம்மாந்துறை வலயத்தில் சர்வதேச ஒலிம்பியாட் சரித்திரத்தில் முதல் சாதனையாகும். (அ)

# சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு பஸ் அன்பளிப்பு செய்தார் சஜித் பிரேமதாஸ

காரைதீவு, ஓக. 16

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் எம்.ஏ.ஹஸன் அலியின் வேண்டுகோளுக்கு அமைவாக சக்வல - பிரபஞ்சம் வேலை திட்டத்தின் கீழ் 75 ஆவது பஸ் வண்டியை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு அன்பளிப்பு செய்யும் நிகழ்வு நேற்று முன் தினம் முற்பகல் 10.30 மணியளவில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பஸ் வண்டியை சஜித் பிரேமதாஸ சம்மாந்துறை ஹிஜ்ரா பெரிய பள்ளிவாசல் சந்தியிலிருந்து செலுத்திக் கொண்டு வந்து குறித்த பாடசாலை முன்றலில் நிறுத்தினார்.

எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஜவுக்கு முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய மாண




வர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் அநோக வரவேற்பளித்தனர்.

இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தயின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் எம்.ஏ.ஹஸன் அலி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.மன்சூர், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹீர் உட்பட கல்வி அதிகாரிகள், பிரதேச செயலாளர் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

ஈழநாடு



# ரஷ்ய தாக்குதல்களினால் 500 உக்ரைன் சிறுவர் பலி!

கீவ், ஓக. 16

**ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு இடையிலான போரில் ரஷ்யாவின் தாக்குதல்கள் காரணமாக இதுவரை சுமார் 500 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.**

**ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் காயமடைந்துள்ளதாக உக்ரைன் அரசாங்கம் கூறியுள்ளது.**

கடந்த ஜூலை மாதம் முதல் இதுவரை ரஷ்யாவின் தாக்குதல் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள் சம்பந்தமான தரவுகளை உக்ரைன் அரசாங்கம் சேகரித்துள்ளது.

இதனடிப்படையில், இந்த காலப்பகுதியில் 9 ஆயிரத்து 396 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 16 ஆயிரத்து 645 பேர் காயமடைந்துள்ளனர்.

ரஷ்யா, உக்ரைனுக்கு எதிரான போரை கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பித்தது. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான போர் ஆரம்பித்து சுமார் ஒன்றை வருடங்கள் கடந்துள்ளன.



உக்ரைனுக்கு எதிரான போர் சில வாரங்களில் முடிந்து விடும் என போரை ஆரம்பிக்கும் போது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# எதியோப்பியாவில் வான்வழித் தாக்குதல்!

## 26 இராணுவ வீரர்கள் உயிரிழப்பு

அம்ஹாரா, ஓக. 16

எதியோப்பியா நாட்டில் நடந்த வான்வழி தாக்குதலில் 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

எதியோப்பியாவில் இராணுவம் மற்றும் உள்ளூர் போராளிகளுக்கு இடையிலான மோதல் காரணமாக இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

அம்ஹாரா பகுதியில் இந்த தாக்குதலானது நடத்தப்பட்டுள்ளது.

இது ட்ரோன் தாக்குதல் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்த 26 பேரும் இராணுவ வீரர்கள் ஆவர்.

இச்சம்பவத்தில் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தாக்குதல் நடத்திவிட்டு தப்பியோடியவர்களை தேடி பிடிக்கும் பணியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. (அ)

# கடாபியின் மகனை விடுவிக்குமாறு லெபனானைக் கோரியது லிபியா!



திரிபோலி, ஓக. 16

லிபியாவின் முன்னாள் நீண்டகால தலைவர் முயம்மர் கடாபியின் மகனின் உடல்நிலை மோசமடைந்து வருவதால் அவரை விடுவிக்குமாறு லிபியாவின் நீதித்துறை அதிகாரிகள் லெபனானை முறைப்படி கேட்டுக் கொண்டனர்.

ஹன்னிபால் கடாபி 2015 ஆம் ஆண்டு முதல் லெபனானில் குற்றஞ்சாட்டப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவர் விசாரணையின்றி காவலில் வைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஜூன் 3 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதில் இருந்து அவரது உடல்நிலை மோசமடைந்து வருகிறது. அதன் பிறகு குறைந்தபட்சம் இரண்டு முறை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர், குறைந்த அளவு தண்ணீர் மட்டுமே குடித்துள்ளார்.

லிபிய சட்டமா அதிபர் அல்-செடிக் அல்-சூர் இந்த மாதம் லெபனான் சட்டமா அதிபர் கசான் ஓய்டாட்டிற்கு இது தொடர்பான கோரிக்கையை அனுப்பியதாக திங்களன்று இரண்டு லெபனான் நீதித்துறை அதிகாரிகளின் தங்கள் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் தெரிவித்தனர். (அ)

# ரஷ்யாவின் பெற்றோல் நிலைய தீ விபத்தில் 25 பேர் உயிரிழப்பு!

மொஸ்கோ, ஓக. 16

தெற்கு ரஷ்ய பிராந்தியமான தாகெஸ்தானில் உள்ள பெற்றோல் நிலையத்தில் ஏற்பட்ட தீ மற்றும் வெடிப்பில் மூன்று குழந்தைகள் உட்பட குறைந்தது 25 பேர் கொல்லப்பட்டனர் என்று பிராந்திய அவசரகால மருத்துவர்களை மேற்கோள் காட்டி இன்ரர்பக்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு காஸ்பியன் கடலோரம் அமைந்துள்ள தாகெஸ்தானி தலைநகர் மகச்சலாவில் நெடுஞ்சாலையின் சாலையோரத்தில் உள்ள கார் பழுதுபார்க்கும் கடையில் தீ தொடங்கியது. பின்னர் அருகிலுள்ள பெட்ரோல் நிலையத்திற்கு பரவியது என்று அதிகாரிகள் செவ்வாயன்று முன்னதாக தெரிவித்தனர்.

"இது ஒரு போர் போன்றது" என்று ஒரு சாட்சி ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் கூறினார்.

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 66 ஆக உயர்ந்தது, அவர்களில் 10 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று ரஷ்ய துணை சுகாதார அமைச்சர்



விளாடிமிர் பிசென்கோவை மேற்கோள் காட்டி ஆர்.ஐ.ஏ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. காயமடைந்தவர்களில் 13 பேர் குழந்தைகள் என்று தாகெஸ்தானி சுகாதார அமைச்சகத்தை மேற்கோள்காட்டி இன்ரர்பக்ஸ் தெரிவித்துள்ளது.

பலத்த காயமடைந்தவர்களை மொஸ்கோவிற்கு வெளியேற்றுவதற்காக விமானம் ஒன்று மகச்சலாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று ரஷ்யாவின் அவசரகால சூழ்நிலைகள் அமைச்சகம் டெலிகிராம் செய்தியிடல் செயலியில் தெரிவித்துள்ளது.

இந்த வெடிப்பு திங்கள்கிழமை இரவு 9:40 மணிக்கு நடந்ததாக தாகெஸ்தான் நிர்வாகத்தின் தலைவர் செர்ஜி மெலிகோவ் டெலிகிராமில் தெரிவித்தார்.

ரஷ்ய நாளிதழான இஸ்வெஸ்டியாவின் டெலிகிராமில் மேற்கோள் காட்டப்பட்ட ஒரு சாட்சி, கார்கள் நிறுத்தப்பட்டிருந்த பகுதியில் தீப்பிடித்து பெற்றோல் நிலையத்திற்கு பரவியதாகக் கூறினார்.

"வெடிப்புக்குப் பிறகு, அனைத்தும் எங்கள் தலையில் விழுந்தன, எங்களால் எதையும் பார்க்க முடியவில்லை," என்று பெயரிடப்படாத சாட்சி மேற்கோள் காட்டப்பட்டது. (அ)

# மணிப்பூரில் மிகவிரைவில் அமைதி ஏற்படுத்தப்படும்

## அறிவித்தார் நரேந்திர மோடி

புதுடில்லி, ஓக. 16

மணிப்பூர் மாநிலத்தில், விரைவில் அமைதியேற்படுத்தப்படும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வு, டில்லி செங்கோட்டையில் இடம்பெற்றது.

இதன்போது, 10ஆவது முறையாக தேசியக்கொடி ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போதே அவர், இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், டிஜிற்றல் இந்தியா திட்டம் எப்படி செயல்படுத்தப்படுகிறது என்பதை தெரிந்து கொள்ள உலகமே



விரும்புகிறது.

உலகின் மிகப்பெரிய ஏற்றுமதியாளர்களாக இந்தியர்கள் உருவாகியுள்ளதாகவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தமது உரையில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஹவாய் காட்டுத்தீயில் சிக்கி 93 பேர் மரணம்!

நியூயோர்க், ஓக. 16

அமெரிக்காவின் ஹவாய் தீவு பகுதியில் கடந்த வாரம் திடீரென காட்டுத்தீ ஏற்பட்டது. பின்னர் இந்த காட்டுத்தீ நகரின் மற்ற பகுதிகளுக்கு வேகமாக பரவ ஆரம்பித்தது.

இந்த காட்டுத்தீயில் சிக்கி இதுவரை 93 பேர் பலியாகியுள்ளனர். அங்கு தொடர்ந்து மீட்பு பணி நடைபெற்று வருவதால் பலியானோர் எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது. தற்போது தீ ஓரளவுக்கு கட்டுக்குள் கொண்டு வரப்



பட்டதால் நிவாரண முகாம்களில் தங்கி இருந்தவர்கள் தங்களது வீடுகளுக்கு திரும்பி வருகின்றனர்.

இந்த தீ விபத்தில் பல கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் சேதமடைந்து இருப்பதால் இயல்பு நிலை திரும்ப பல ஆண்டுகள் ஆகும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# சவூதியின் கழகத்தில் இணைகிறார் நெய்மர்!



பாரிஸ், ஒக. 16

பிரேஸில் உதைபந்தாட்ட நட்சத்திரமான நெய்மர் சவூதி அரேபியாவின் அல் ஹிலால் கழகத்தில் விளையாட இணங்கியுள்ளார்.

31 வயதான நெய்மர், கடந்த 6 வருடங்களாக பிரான்ஸின் பாரிஸ் சென். ஜெர்மைன் (பி. எஸ். ஜி.) கழகத்தில் விளையாடி வந்தார். அக்கழகத்தில் நெய்மரின் ஒப்பந்த காலம் 2025 ஆம் ஆண்டிலேயே முடிவடைய விருந்தது.

இந்நிலையில் அவரை அல் ஹிலால் கழகத்துக்கு விற்பதற்கு பி. எஸ். ஜி. கழகம் இணங்கியுள்ளது. அல் ஹிலால் கழகத்துடன் 2 வருட கால ஒப்பந்த மொன்றில் நெய்மர் கையெழுத்திடவுள்ளார். இதற்காக அவர் மருத்துவ சோதனையில் தேர்ச்சியடைய வேண்டும்.

அல் ஹிலால் கழகத்தில் விளையாடுவதற்காக அவருக்கு வருடாந்தம் 15 கோடி யூரோ - நம் நாட்டு மதிப்பில் சுமார் 5,250 கோடி ரூபாய் ஊதியம் வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகின் முன்னிலை உதைபந்தாட்ட நட்சத்திரங்களில் ஒருவரான போர்த்துக்கல் வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ இந்த வருட முற்பகுதியில் சவூதி அரேபியாவின் அல் நாசர் கழகத்தில் இணைந்தார்.

நெய்மருடன் பி. எஸ். ஜி. கழகத்தில் விளையாடி வந்த ஆர்ஜென்ரீன வீரர் லயனல் மெஸ்ஸி அண்மையில் அமெரிக்காவின் இன்ரர் மியாமி கழகத்தில் இணைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# டெஸ்ட் போட்டி; ஹசரங்க ஓய்வு!

கொழும்பு, ஒக. 16

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதற்கு இலங்கைக் கிரிக்கெட் வீரர் வனிந்து ஹசரங்க தீர்மானித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபைக்கு எழுதியுள்ள கடித மொன்றில் இந்த முடிவை அவர் அறிவித்துள்ளார்.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளில் கவனம் செலுத்துவதற்காக இந்த முடிவை எடுத்ததாக ஹசரங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி தனது 26ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய வனிந்து ஹசரங்க 2020 முதல் 4 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார். இறுதியாக 2021 ஏப்ரலில் நடைபெற்ற பங்களாதேஷுக்கு எதிரான போட்டியே அவர் இறுதியாக விளையாடிய டெஸ்ட் போட்டியாகும்.

2017 முதல் 48 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும், 2019 முதல் 58 சர்வதேச இருபது - 20 போட்டிகளிலும் அவர் விளையாடியுள்ளார். (ஐ)

# மொன்றியல் ரென்னிஸ்; சின்னெர் சம்பியனானார்!



மொன்றியல், ஒக. 16

மொன்றியல் ஓப்பன் ரென்னிஸில் இத்தாலி வீரர் சின்னெர் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

கனடாவின் மொன்றியலில் நடந்த ரென்னிஸ் தொடரில் ஆண்களுக்கான இறுதிப் போட்டி இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

8ஆம் நிலை வீரர் யானிக் சின்னெர் (இத்தாலி), அவுஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினாரை எதிர்கொண்டார். விறுவிறுப்பான இந்த மோதலில் சின்னெர் 6-4, 6-1 என்ற நேர் செற்றில் மினாரை தோற்கடித்து சம்பியன் பட்டத்தைத் தனதாக்கினார்.

இது ஆயிரம் தரவரிசை புள்ளிகளை வழங்கும் மாஸ்டர்ஸ் டெனிஸ் வகை போட்டியாகும். ஏ.டி.பி. மாஸ்டர்ஸ் டென்னிசில் இத்தாலி வீரர் ஒருவர் மகுடம் சூடுவது இது 2ஆவது முறையாகும். இதற்கு முன்பு இத்தாலியின் பாபியோ போக்னினி 2019ஆம் ஆண்டு மார்ன்டே கார்லோ மாஸ்டர்ஸ் ரென்னிஸில் பட்டம் வென்று இருந்தார்.

# தம்புள்ளை அணியிடம் வீழ்ந்தது கண்டி அணி!



கொழும்பு, ஒக. 16

கண்டி அணிக்கு எதிரான போட்டியில் 20 ஓட்டங்களால் தம்புள்ளை அணி வெற்றி பெற்றது.

எல். பி. எல். தொடர் என்று அழைக்கப்படும் லங்கா பிறீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் நடந்த போட்டியில் பி லவ் கண்டி, தம்புள்ளை ஔரா அணிகள் மோதின.

ஏற்கனவே இந்த இரண்டு அணிகளும் பிளே ஓவ் சுற்றில் விளையாட தகுதிபெற்றிருந்ததால் இப் போட்டி முடிவு இரண்டு அணிகளுக்கும் எவ்வித் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இந்த வெற்றியுடன் தம்புள்ளை ஔரா 12 புள்ளிகளுடன் அணிகள் நிலையில் முதலாம் இடத்தைப் பெற்றதுடன் பி லவ் கண்டி 8 புள்ளிகளுடன் தொடர்ந்தும் 2ஆம் இடத்தில் இருக்கிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தம்புள்ளை 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

அவிஷ்க பெர்னாண்டோ, சதீர சமரவிக்ரம ஆகிய இருவரும் 47 பந்துகளில் 61 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறப்பான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர். ஆனால், 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முதல் 3 விக்கெட்கள் சரிந்ததால் தம்புள்ளை நெருக்கடியை எதிர்கொண்டது.

முதலாவதாக சதீர சமரவிக்ரம 31 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். மறு பக்கத்தில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய அவிஷ்க பெர்னாண்டோ 27 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 3 பௌண்டரிகளுடன் 41 ஓட்டங்களைப் பெற்று ஆடுகளம் விட்டகன்றார். லக்ஷான் எதிரிசிங்க சொற்ப நேரம் துடுப்பெடுத்தாடி 6 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

மொத்த எண்ணிக்கை 104 ஓட்டங்களாக இருந்தபோது பதில் அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா (10), அலெக்ஸ் ரொஸ் (0) ஆகிய இருவரையும் நுவன் ப்ரதீப் ஆட்டமிழக்க செய்தார்.

இதேவேளை, மிகவும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி வனிந்து ஹசரங்க வீசிய 18ஆவது ஓவரில் 2 சிக்ஸர்களை விளாசிய பென் மெக்டமட் 37 ஓட்டங்களுடன் அதே ஓவரில் ஆட்டம் இழந்தார்.

16 பந்துகளில் 26 ஓட்டங்களைப் பெற்ற ஹேடன் கேர் கடைசிப் பந்தில் ஆட்டம் இழந்தார். சச்சித ஜயதிலக்க 4 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் நுவன் பிரதீப் 35 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் முஜீப் உர் ரஹ்மான் 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைபற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பி லவ் கண்டி 19.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

ஆரம்ப வீரர்களான பக்கார் ஷமான் (8), மொஹமட் ஹரிஸ் (2) ஆகிய இருவரையும் சுழல்பந்துவீச்சாளர் தனஞ்சய டி சில்வா தனது முதலாவது ஓவரிலேயே ஆட்டம் இழக்கச்செய்து எதிரணியை திணறச் செய்தார்.

இந் நிலையில் துடுப்பாட்ட வரிசையில் தன்னையே உயர்த்திக்கொண்ட அணித் தலைவர் வனிந்து ஹசரங்க டி சில்வா வேகமாக ஓட்டங்களைக் குவிக்க முனைந்த போதிலும் 19 ஓட்டங்கள் ஆட்டமிழந்தார்.

தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ் ஆகிய இருவரும் 4ஆவது விக்கெட்டுக்காக மெதுவாக இணைந்து ஆடினர். அணி 88 ஓட்டங்களை பெற்றிருந்த போது மத்தியூஸ் (26), சதுரங்க டி சில்வா (1) என தனஞ்சயவின் ஓவரில் ஆட்டமிழந்தனர்.

அசிவ் அலி 3 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது துரதிர்ஷ்டவசமாக ரன் அவுட் ஆனதுடன் அஷேன் பண்டார வந்த வேகத்திலேயே ஓட்டம் பெறாமல் வெளியேறினார்.

மறுபக்கத்தில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த தினேஷ் சந்திமால் 50 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

கடைநிலை வீரர்களில் இசுறு உதான 23 ஓட்டங்களைப் பெற்ற போதிலும் பி லவ் அணியால் வெற்றி இலக்கை அண்மிக்க முடியாமல் போனது.

பந்துவீச்சில் தனஞ்சய டி சில்வா 4 விக்கெட்களையும் ப்ரமோத் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். (ஐ)



# மொன்றியல் ஓப்பன்; பெகுலா சம்பியன்!

மொன்றியல், ஒக. 16

மொன்றியல் ஓப்பன் ரென்னிஸில் இத்தாலி வீரர் ஜெசிகா பெகுலா சம்பியனானார்.

கனடாவின் மொன்றியலில் நடந்த ரென்னிஸ் தொடரில் ஆண்களுக்கான இறுதிப் போட்டி இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இதில், 3ஆவது இடத்தில் உள்ள ஜெசிகா பெகுலா (அமெரிக்கா), லுட்மிலா சம்சோனோவாவுடன் (ரஷ்யா) மோதினர்.

இதில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய பெகுலா 6-1, 6-0 என்ற நேர் செற்றில் வெறும் 49 நிமிடங்களில் சம்சோனோவாவை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

2013-ம் ஆண்டு செரீனா வில்லியம்ஸுக்கு பிறகு கனடா ஓப்பனை ருசித்த முதல் அமெரிக்க வீராங்கனை என்ற சிறப்பையும் பெற்றார். 29 வயதான ஜெசிகாவுக்கு மொத்தத்தில் இது 3ஆவது சர்வதேச பட்டமாகும். (ஐ)

# தமிழரின் கைகளில் மீண்டும் ஆயுதங்களை திணிக்க முயற்சி

## சிறீதரன் எம். பி. சாடல்

கிளிநொச்சி, ஓக. 16

**தமிழர்களுடைய கைகளில் மீண்டும் ஆயுதங்களை திணிக்க வேண்டுமென முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர மற்றும் விமல் வீரவன்ஸ போன்றோர் நினைக்கின்றார்கள். அப்படி என்றால் அச்சந்தர்ப்பத்தை சந்திக்க தயாராக இருக்கிறோம் என்று சிறீதரன் எம். பி. தெரிவித்துள்ளார்.**

தான் வடக்கு, கிழக்குக்கு செல்வதாகவும், அங்கே விகாரைகள் மற்றும் பிக்குகள் மீது கை வைக்க முயன்றால் அங்குள்ளவர்களின் தலைகளுடனேயே களனிக்கு திரும்புவதாகவும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சிறீதரனை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

1985இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொடுத்த செவ்வியொன்றில் கூட "நாங்கள் ஆயுதங்களை விரும்பி தூக்கவில்லை. எங்களுடைய மக்களின் பாதுகாப்புக்காக ஆயுதங்கள் எங்கள் கைகளில் திணிக்கப்பட்டது" என்று கூறினார்.

ஆகவே, மீண்டும் ஆயுதங்களை எங்களுடைய கைகளில் திணிக்க வேண்டுமென இவர்கள் நினைக்கின்றார்கள் என்றால் அப்படியொரு சந்தர்ப்பத்தை நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம்.

அவர்கள் தலையை கொய்தால் நாம் கைகட்டி வேடிக்கை பார்ப்போம் என்று மேர்வின் சில்வா கருதுவது இந்த நவீன உலகத்திற்கு பொருந்துமா என்பதை காலம் தான் தீர்மானிக்க வேண்டும். பௌத்த விகாரைகளை தமிழர்கள் பிடுங்கிக் கொள்ளப்போவதாகவும் அதை தான் காப்பாற்றப்போவதாகவும் சிங்



கள மக்களுக்கு காட்டி பெரிய அரசியலொன்றை செய்யலாம் என மேர்வின் சில்வா கருதுவதாக சிறீதரன் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# இசை நிகழ்ச்சியில் தாக்குதல்; நான்கு பொலிஸார் காயம்!

கொழும்பு, ஓக. 16

இசை நிகழ்ச்சியில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பெந்தோட்டை பொலிஸ் பிரிவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இசை நிகழ்ச்சியை காண வந்த இரு இளைஞர் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலை தடுக்க முற்பட்டபோதே பொலிஸார் தாக்கப்பட்டனர்.

தாக்குதலில் காயமடைந்த நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பெந்தோட்டை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. பெந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கதிர்காமம் நோக்கிச்சென்ற பஸ் விபத்துக்குள்ளாகி எழுவர் காயம்

கொழும்பு, ஓக. 16

கொழும்பில் இருந்து கதிர்காமம் நோக்கி பயணித்த பஸ் ஒன்று பம்பலப்பிட்டி பகுதியில் வைத்து விபத்துக்குள்ளானதில் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன் தினம் அதிகாலை பாரவூர்தி ஒன்றுடன் குறித்த பேருந்து மோதி வீதியில், குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்தில், காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# சீனா பயணமானார் தினேஷ்

கொழும்பு, ஓக. 16

சீனாவுக்கான நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று முன் தினம் இரவு கொழும்பிலிருந்து சீனாவுக்கு பயணமானார்.

சீன வர்த்தக அமைச்சு மற்றும் யுவான் மாகாண அரசு இணைந்து நடத்தும் 7ஆவது சீன - தெற்காசிய எக்ஸ்போ கண்காட்சி மற்றும் 27ஆவது சீனா குன்மிங் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கண்காட்சி ஆகியவற்றில் அவர் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

சீனாவின் குன்மிங்கில் இன்று முதல் 20 ஆம் திகதி வரை இந்த எக்ஸ்போ கண்காட்சி நடைபெறவுள்ளது.

எக்ஸ்போ ஏற்பாட்டாளர்களின் கருத்துப்படி, இந்த மாபெரும் வர்த்தக கண்காட்சியில் 60 நாடுகள் பங்கேற்கவுள்ளன.

அவை அனைத்து தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளும், பிராந்திய பொருளாதார பங்குடமை உறுப்பு நாடுகளும் அடங்கும்.

'பொது அபிவிருத்திக்கான ஒருமைப்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு' என்ற கருப்பொருளின் கீழ் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது.

இராஜாங்க அமைச்சர்களான தாரக பாலசூரிய, ஜானக வக்கும்புர மற்றும் கனக ஹேரத் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன மற்றும் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோரும் சீனாவுக்கு பயணம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்ப்பாணத்தில் நேற்று இந்திய சுதந்திரதின நிகழ்வு





யாழ்ப்பாணம், ஓக. 16

இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வு யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் நேற்று காலை இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாண இந்திய துணைத் தூதுவர் ராகேஸ் நடராஜ் ஜெயபாஸ்கரன் அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்து வரப்பட்டு இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இந்திய ஜனாதிபதியின் உரையை துணைத்தூதுவர் வாசித்தார்.

இந்திய தேச விடுதலைப் போராட்டத்தில் உயர் நீர்தவர்களை நினைவுகூரும் வகையிலான நினைவுக்கல் ஒன்றையும் துணைத் தூதுவர் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மதத்தலைவர்கள், தூதரக அதிகாரிகள், பணியாளர்கள், கல்வியலாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய விசேட வேலைத்திட்டம்

## அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அறிவிப்பு

கொழும்பு, ஓக. 16

அரசியல்வாதிகள் மாறினாலும், மாறாத சுற்றுலாக் கொள்கை விரைவில் முன்வைக்கப்படும் என்று சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

துறைசார் ஆய்வாளர்களால் தயாரிக்கப்பட்ட குறித்த கொள்கை வரைவை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளதாகவும், அது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பதை எதிர்வரும் இரண்டு வாரங்களில் நாட்டுக்கு முன்வைப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் வீழ்ச்சியடைந்திருந்த சுற்றுலாத்துறை, தற்போது முன்னேற்றமடைந்து வருகிறது. ஆனாலும் நாம் எதிர்பார்த்துள்ள இலக்கை இன்னும் அடையவில்லை. படிப்படியாக நாம் சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும்.

சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு நம் நாட்டில் உள்ள ஹோட்டல் அறைகள் போதுமானதாக இல்லை. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், தற்போது நாடு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக ஸ்திர நிலையை அடைந்து வருவதால் எமது நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

எனவே நாம் அவர்களுக்குப் பொருத்தமான தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்குப் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமது சொந்தக் கட்டடங்களைச் சுற்றுலா விடுதிகளாக பயன்படுத்த விருப்பமுள்ள கட்டட உரிமையாளர்கள் சுற்றுலா சபையில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதன் மூலம் அவர்கள் வருமானம் ஈட்டுவதுடன் நாட்டின் சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்கும் உதவ முடியும்.

புதிய சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு வரவழைக்கும் வகையில் நாட்டின் அழகிய இடங்கள் குறித்த குறும்பட விழாவொன்றை நடத்தவுள்ளோம். இந்த நாட்டில் உள்ள எவரும் இதில் பங்கேற்கலாம். சிறந்த குறும்படத்திற்கு பரிசில்களை வழங்கவும் அவர்களின் எதிர்காலப் பணிகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கான பயிற்சிகளை வழங்கவும் தீர்மானித்துள்ளோம்.

விரிவான கலந்துரையாடல்களுக்குப் பின்னர், சுற்றுலாத் துறைக்கான புதிய கொள்கை ஒன்றை வகுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது நடைமுறைக்கு வருமிடத்து, நாட்டில் அமைச்சர்கள் மாறினாலும், எப்போதும் மாறாத நிலையான சுற்றுலாக் கொள்கையுடைய சுற்றுலா வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.-என்றார்.

# வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 16

சந்தையில் எலுமிச்சை மற்றும் வாழைப்பழங்களின் விலை அதிகரித்துள்ளது.

நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக, விளைச்சல் குறைவடைந்தமையினால், இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, ஒரு கிலோ கிராம் எலுமிச்சையின் விலை ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

அதேநேரம் ஒரு கிலோகிராம் புளி வாழை 130 ரூபாவுக்கும், ஏனைய வகை வாழைப்பழங்கள் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## ஒன்றிணைந்த...

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும்,

நாட்டில் பத்தாயிரத்து எண்பத்து ஒன்பதுக்கும் மேற்பட்ட விகாரைகளும், பத்தாயிரத்து பதினெட்டுக்கும் மேற்பட்ட தஹம் அறநெறிப் பாடசாலைகளும் 800இற்கும் மேற்பட்ட பிரிவெனாக்களும் உள்ளன. இவற்றை ஐக்கிய மக்கள் சக்தி பலப்படுத்தும்.

கடந்த கால ஆட்சியாளர்களின் பணியாற்றுகைகளைப் பார்த்து ஐக்கிய மக்கள் சக்தியின் பயணத்தை மதிப்பிட வேண்டாம் என்று மகா சங்கத்தினரிடம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். தச ராஜ தர்ம கொள்கைகளை மையப்படுத்தி அரசை நிர்வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள ஒவ்வொரு வழிபாட்டுத் தலங்களிலும் சமய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படும். சமய வழிபாட்டுத் தலங்களுக்கு சமய நிதியம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு சன்மார்க்க சமுதாயத்தை உருவாக்க உதவுவோம்.

ஒன்றித்த நாட்டுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 13ஆவது திருத்தச் சட்ட அதிகாரப் பரவலாக்கத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறேன். ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண தேசிய ஒற்றுமை மிகவும் அவசியம். நாட்டின் அனைத்து பிரஜைகளும் சமமாக கருதப்பட்டு ஒவ்வொரு சமூகமும் சுயமரியாதையுடன் வாழும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள விசேட இடம் எப்போதும் பாதுகாக்கப்படும். ஏனைய மதங்களும் சமயங்களும் பாதுகாப்பாக இருக்க செயல்பட வேண்டும். நாட்டில் பிளவு ஏற்பட்டால், நாட்டின் தேசிய பாதுகாப்பு பற்றி பேசுவதில் அர்த்தமில்லை என்றும், அந்தப் பிரிவினையை இல்லாதொழிக்க வேண்டும்.

நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக அனைத்து மக்கள் சமூகங்களும் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். அந்த இலக்கை நோக்கி ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் செயல்படும் - என்றும் இதன்போது அவர் தெரிவித்தார். (ஐ)

## மூன்று...

நேற்று அதிகாலை 3 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், யாழ்ப்பாணம் - கோப்பாயை சேர்ந்த மருதவண்ணன் கலைவதனன் என்பவர் உயிரிழந்தார். தவிர, கொழும்பின் முல்லேரியா, வெல்லம்பிட்டி பிரதேசங்களை சேர்ந்த இருவரும் உயிரிழந்தனர்.

இரு பாரவூர்திகள், ஹைஏஸ் வாகனம் மோதி இடம்பெற்ற இந்த விபத்துக் குறித்து மேலும் அறிய வருவதாவது,

கொழும்பு வெல்லம்பிட்டியிலிருந்து பொருட்களை ஏற்றியவாறு சிறிய ரக பாரவூர்திகளில் சிலர் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தனர். இந்நிலையில், ஒரு பாரவூர்தியின் சில்லு காற்றுப் போனதால் அதனை மாற்றியுள்ளனர்.

அந்தச் சமயம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வேகமாகப் பயணித்த ஹைஏஸ் வாகனம் அங்கு நின்ற பாரவூர்திகளை மோதியது. இதன்போது, பாரவூர்தியின் ரயரை மாற்றிக் கொண்டிருந்த மூன்று பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 8 பேர் படுகாயமடைந்தனர்.

உயிரிழந்தவர்களின் சடலம் முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஐ. எம். எவ். பிரதிநிதிகள் செப்ரெம்பரில் வருவர்!

கொழும்பு, ஓக. 16

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் எதிர்வரும் செப்ரெம்பர் 14 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடன் திட்டம் தொடர்பில் மீளாய்வு செய்யும் வகையில் இவர்கள் இலங்கை வருகின்றனர். சர்வதேச நாணய நிதியத்துடனான மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் 11ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை தொடர்ந்து 8 நாட்களுக்கு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய முன்னதாக தெரிவித்திருந்தார்.

இந்தக் கூட்டத்தின் பின்னர் இலங்கை, கோரப்பட்ட கடன் தொகையின் இரண்டாம் தவணையை பெற்றுக் கொள்ளும் என தாம் நம்புவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

# ராஜபக்ஷக்களுடன் இணையும் தேவை எமக்குக் கிடையாது!

## வாசுதேவ நாணயக்கார

கொழும்பு, ஓக. 16

ராஜபக்ஷக்களுடன் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய தேவை எமக்கு கிடையாது. அரசியலில் நாங்கள் தனித்து சிறந்த முறையில் செயல்படுகிறோம் என்று இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவை பிளவுபடுத்தும் அரசியல் காய் நகர்த்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறமையாக செயல்படுத்துகிறார். ராஜபக்ஷக்களுடன் ஒன்றிணைய வேண்டிய தேவை எமக்கில்லை. இருப்பவர்களை யாவது ராஜபக்ஷக்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படும் மேலவை இலங்கை கூட்டணியின் உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் ஒன்றிணைய கோரிக்கை விடுத்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிடுவது அடிப்படையற்றது.

விலகிச் சென்றவர்கள் மீண்டும் ஒன்றிணையலாம் என சிறீ லங்கா பொதுஜன பெரமுன தான் எம்மிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அரசியலில் நாங்கள் தனித்து சிறந்த முறையில் செயற்படுகிறோம்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவை பிளவுபடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறந்த முறையில் அரசியல் காய் நகர்த்தலை முன்னெடுக்கிறார். அரசாங்கத்தில் அமைச்சு பதவி வகிக்கும் ஒரு தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகவும் அமைச்சு பதவி இல்லாத பிறிதொரு தரப்பினர் பஸில் ராஜபக்ஷவுக்கு ஆதரவாகவும் செயல்படுகிறார்கள்.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் பரந்துப்பட்ட அரசியல் கூட்டணியை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார்.

ஆகவே, விலகி சென்றவர்களை மீண்டும் இணைப்பதற்கு முன்னர் இருப்பவர்களை பொதுஜன பெரமுன தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

மக்களால் புறக்கணிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கி நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு பொதுஜன பெரமுன துணை செல்கிறது. 69 இலட்சம் மக்களாணைக்கும், ஜனாதிபதியின் கொள்கைக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடு காணப்படுகிறது. ஆகவே, பொதுஜன பெரமுனவே தவறை திருத்திக் கொள்ள வேண்டும் - என்றார்.

## மீண்டும்...

ஊடக்வே ஆண்டகை.

மேலும், இது நல்லிணக்கத்துக்கான நேரம். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான பயணங்கள். வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான ஜனாதிபதியுடன் சந்திப்பு போன்ற முயற்சிகள் ஊடாக நல்லிணக்கத்தை எட்டுவதற்கு அதிகாரிகள் எடுக்கும் முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம் என்றும் கூறினார்.

பிரசித்தி பெற்ற மன்னார் மடு மாதா தேவாலயத்தின் ஆவணி மாதத் திருவிழாவில் நேற்று பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தனது உரையில்,

திருத்தந்தை உங்கள் நாட்டை அன்பு செய்கிறார். 2015 ஜனவரி 14ஆம் திகதி திருத்தந்தை இந்த நாட்டுக்கும் இத்திருத்தலத்துக்கும் மேற்கொண்ட திருத்தூது பயணத்தை அவர் மிகவும் பாராட்டுகின்றார். அன்றைய நாளில் அவருக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட மடு மாத திருச் சொரூபத்தை அவர் இன்று வரை போற்றுகின்றார். உலகம் போற்றும் இத்திருத்தலத்தில் அன்று அவர் ஆற்றிய உரையை நோக்கி இன்று எனது சிந்தனைகள் செல்கிறது.

உடல் ரீதியான உணர்வு ரீதியான வடுக்களை விட்டுச் சென்ற 26 வருடங்கள் நீடித்துச் சென்ற உள்நாட்டு போரின் தாக்கங்களை நாம் மறந்து விட முடியாது. பல தடவைகளில் இந்த போரைப் பற்றி நான் கேள்விப்பட்டு இருக்கின்றேன் - வாசித்தும் இருக்கின்றேன்.

எனினும், 2 வாரங்களுக்கு முன்னர் யாழ். மறை மாவட்டத்துக்கு நான் மேற்கொண்டிருந்த மீட்புப்பணி பயணத்தின் போது மக்கள் மீதும், கைவிடப பட்ட வீடுகள் மீதும் உடைமைகள் மீதும் போரின் தாக்கம் எவ்வாறு இருந்தது என்பதை இன்னும் ஆழமாக பார்ப்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

மீண்டும் ஒரு போர் வேண்டாம். இன,மத,மொழி,சாதி கருத்து போன்ற வேற்றுமைகளுக்கு அப்பால் அன்பும், அமைதியும் சகிப்புத்தன்மையும் நிலைபெறுவதாக. வெறுப்பும் விரோதமும் வேண்டாம். ஏனெனில், சமாதானம் என்பது ஓர் இல்லாத நிலை அன்று. இது நல்லிணக்கத்துக்கான நேரம். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான பயணங்கள். வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான ஜனாதிபதியுடன் சந்திப்பு போன்ற முயற்சிகள் ஊடாக நல்லிணக்கத்தை எட்டுவதற்கு அதிகாரிகள் எடுக்கும் முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம்.

இதேவேளை ஒரு வாரத்துக்கு முன்னர் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தெளிவாகக் குறிப்பிட்டது போல அனைவரும் நன்கு அறிந்த குழப்பமான விடயங்களை போதுமான அளவில் தீர்த்து வைக்கும் வகையில் இந்த செயன்முறைகள் அமையும் என நாங்கள் நம்புகிறோம்.

மூன்று வருடங்களுக்கு முன் நான் இலங்கைக்கு வந்த போது இந்த நாட்டின் பல பாகங்களுக்கும் நான் பயணம் செய்தேன். இலங்கை மக்கள் பொதுவாக நல்லவர்கள். சகிப்புத் தன்மை கொண்டவர்கள். குறைவாக உள்ள சிறு குழுவினர் உங்கள்மீது எதிர் மறையாக செல்வாக்கு செலுத்தவோ, உங்களை திசை திருப்பவோ அனுமதிக்க வேண்டாம்.

பல்வேறு சமயங்களை சார்ந்த சமயத்தலைவர்கள் அன்பையும் சகோதரத்துவத்தையும் நோக்கிய சரியான கொள்கையை நோக்கி மக்களை வழி நடத்துவதில் முன்னனி பங்கு வகிக்க வேண்டும். எந்த ஒரு சமயத் தலைவரும் தமக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள், மதிப்பு, சலுகைகள் போன்றவற்றை பயன்படுத்தி மற்றைய சமயங்களை இழிவுபடுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நாம் முன்னுதாரணமாக திகழ்ந்து வழிநடத்த வேண்டும். நாம் ஒன்றிணைப்பின் முகவர்களாக திகழ வேண்டுமே தவிர பிரிவினை வாதத்தின் முகவர்களாக அல்ல - என்றும் கூறினார். (ஐ)

## சந்நிதியானுக்கு...

மணிக்கு காலை திருவிழாவும், 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9:00 மணிக்கு பூங்காவனத் திரு விழா வும், மறுநாள் 26 ஆம் திகதி காலை 8:00 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும், 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6:00 மணிக்கு சப்பை ரதத் திருவிழாவும், 30 ஆம் திகதி புதன்கிழமை காலை எட்டு மணிக்கு தேர்த் திருவிழாவும், 31 ம் திகதி வியாழக் கிழமை தீர்த்த திருவிழாவும், இடம் பெறவுள்ளன.

பக்தர்களின் வசதிகருதி விசேட போக்குவரத்து, பாதுகாப்பு, சுகாதார வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

உற்சவகாலங்களில் ஆலய சூழலில் உள்ள அன்னதானம் இடம் பெறவுள்ளது. (அ-02)

## எரிசக்தி...

விழாவை தேசிய விழாவாக கருதி, இதைப் பாதுகாத்து, தொடர்ந்து நடத்துவதற்கு தேவையான ஆதரவை வழங்க வேண்டியது அரசின் பொறுப்பு.

அத்துடன், வருடாந்த மடு திருவிழாவை நடத்துவதற்கு தம்மை அர்ப்பணிக்கும் அனைத்து பிதாக்களுக்கும் அரசாங்கத்தின் சார்பாக எனது நன்றிகளை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏராளமான பக்தர்கள் இங்கு வந்து மடு மாதாவிடம் பிரார்த்தனை செய்து நிவாரணம் பெறுகின்றனர்.

கடந்த வருடம் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது, பெருமளவான மக்கள் இங்கு வந்து மடு மாதாவின் உதவியையும் பாதுகாப்பையும் நாடினர். அந்த இக்கட்டான நேரத்தில் மடு அன்னையின் ஆசீர்வாதம் எங்களுக்கு பலத்தை அளித்தது என்றே சொல்ல வேண்டும்.

அன்னை வாழும் மன்னாரின் இந்தப் பகுதி, புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பெற்ற பகுதியாகும். இங்கு கிடைக்கும் சூரிய சக்தி, காற்றாலை மற்றும் பசுமை ஆற்றல் மூலம் மன்னார் மாவட்டத்தை ஆற்றல் மையமாக உருவாக்க முடியும். பூநகரியை எரிசக்தி நகரமாக மாற்றவும் திட்டமிட்டுள்ளோம்.

இந்தப் புண்ணிய பூமியும் காடுகளும் பாதுகாக்கப்படும் வகையில்தான் இந்த வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் செய்யப்படுகின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அத்துடன், இப்பகுதிகளின் அபிவிருத்தி பணிகளில் ஆயரிடமிருந்து ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளேன்.

இதனால், இப்பகுதிகளில் விரைவான வளர்ச்சியை கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அனைத்து செயல்பாடுகளுடனும் 2048ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்புவோம் என நம்புகின்றோம். அதற்கு உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறேன்” என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# குருநகரில் இன்று டெங்கு ஒழிப்பு திட்டம்!



யாழ்ப்பாணம், ஓக.16

மாகாண டெங்கு வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் இன்று புதன்கிழமை குருநகர் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் களத்தரிசிப்பு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு ஜே/ 68, ஜே/69 ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு தொண்டர்கள், சுகாதார உதவியாளர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

உயிர் கொல்லி நோயிலிருந்து எம் சமூகத்தை பாதுகாப்பதற்கு ஒன்றிணையுமாறும் இன்று வருகை தரும் உத்தியோகத்தர்களுக்கு புரண ஒத்துழைப்பு வழங்குமாறும் பொதுச் சுகாதார பரிசோதகர் ரி. சதீஸ்குமார் கேட்டுள்ளார். (ரி)

# மருத்துவரின் சிட்டையின்றி மருந்து விற்றவருக்கு மறியல்!

கொழும்பு, ஓக. 16

மருத்துவரின் பரிந்துரை சீட்டு இன்றி உயர் இரத்த அழுத்தத்துக்கான மருந்தை விற்பனை செய்த குற்றச் சாட்டில் மதவாச்சி பிரதேசத்தை சேர்ந்த மருந்தக உரிமையாளர் கைது செய்யப்பட்டதாக அபாயகரமான மருந்து கட்டுப்பாட்டுச் சபையின் அநுராதபுர பணிமனை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மதவாச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

உரிம நிபந்தனைகளை மீறி மருத்துவரின் பரிந்துரை சீட்டு இல்லாமல் இந்த மருந்துகளை விற்பனை செய்ததாக சந்தேகத்தின் பேரில் மருந்து கடையின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார்.

போதைக்கு அடிமையானவர்கள் இந்த மருந்தை வாங்குவதாக கூறப்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு மருந்து அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகின்றது. (ஐ)

# வவுனியா மருத்துவமனை விவகாரம் விசாரணைக்கு மூவர் குழு நியமனம்!

வவுனியா, ஓக. 16

வவுனியா பொது மருத்துவமனையில் பிறந்த சிசுவுக்கு சிகிச்சை அளிப்பதில் தாதியர் நடந்துகொண்ட விதம் மற்றும் தாதிய உத்தயோகத்தர்கள் தமது கடமையை முறையாக செய்யவில்லை என தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை மூவர் குழு மாகாண சுகாதார பணிப்பாளரால் நியமிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் கடந்த 4 ஆம் திகதி குழந்தை பேற்றுக்காக சேர்க்கப்பட்ட கர்ப்பவதி பெண் மற்றும் அவரின் கணவருக்கும் பிரசவ விடுதியில் கடமையிலிருந்த தாதிய உத்தியோகத்தருக்கும் முரண் பாடு ஏற்பட்டது. குழந்தை பிறந்த பின்னரும் முரண் பாடு தொடர்ந்திருந்ததுடன், தனது குழந்தையின் பாதுகாப்பு கருதி இடையிலேயே மருத்துவமனையி லிருந்து விடுவிக்கக் கோரியதுடன் விடுதியிலிருந்து அவர்களை செல்ல அனுமதித்தபோதும், ஆவணங்களை வழங்காது தாதிய உத்தியோகத்தர்கள் இழுத்தடித்தனர். இது தொடர்பில், பாதிக்கப்பட்டவர் முகநூலில் பதிவு ஒன்றை இட்டிருந்தார்.

இந்த விடயம் வவுனியா மாவட்ட சுகாதார வட்டாரத்திலும் மக்கள் மத்தியிலும் பெரும் பரபரப்பாக பேசப்பட்ட நிலையில் வட மாகாண ஆளுநரின் கவனத்துக்கு இவ்விடயம் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக ஆளுநரின் ஆலோசனைக்கு அமைய வட மாகாண சுகாதார பணிப்பாளர் நேற்று காலை வவுனியா மருத்துவமனைக்கு வருகை தந்து விசாரணை நடத்தினார். தொடர்ந்து மூவர் கொண்ட குழுவும் விசாரணைக்காக நியமித்தார். (ஐ)

# பருத்தித்துறை வைத்தியசாலையில் திங்கள் முதல் தண்ணீர்வசதி இல்லை!

வடமராட்சி ஓகஸ்ட்15

**பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்றுமுன் தினம் திங்கள் முதல் தண்ணீர் வசதி இன்றி நோயாளர்கள் மற்றும் மருத்துவமனை அதிகாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

இது குறித்து பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் அத்தியட்சகரை தொடர்பு கொண்டு கேட்டபோது'

மருத்துவமனைக்கு நீர் வழங்கும் பிரதான நீர்ப்பம்பி செயலிழந்துள்ளமையினால் நேற்று முன்தினம் முதல் தண்ணீர் வசதி இன்றியுள்ளதாகவும், ஆனால் சிறிய ரக தண்ணீர் பம்பி மூலம் பகுதி பகுதியாக நீர் வசதி செய்யப்பட்டுவருவதாகவும் தெரிவித்ததுடன் அதனைச் சீர் செய்வதற்கு புதிய தண்ணீர் பம்பி கொள்வனவு செய்வதற்கு பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனையின் அனுமதியை பெற்று மீளமைக்க கால தாமதமாகலாம் என்றும், யாராவது 7.5 குதிரை வலு கொண்ட நீர்ப்பம்பி ஒன்றினை கொடையளித்தால் தண்ணீர் பிரச்னை உடனடியாக தீர்க்கப்படலாம் என்றும் தெரிவித்தார்.

மருத்துவமனையில் மலசல கூட பயன்பாடு உட்பட குடிதண்ணீர் வசதிகளை பெற்றுக்கொள்ள முடியாமல் நோயாளர்கள் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர்.

குறித்த மருத்துவமனையின் குடிதண்ணீர் வசதிக்காக சுத்திகரிக்கப்பட்டு வடிகட்டப்பட்ட குடிதண்ணீர் வசதியை சந்நிதியான் ஆச்சிரம் செய்து கொடுத்திருந்தது.

அதனையே நோயாளர்கள் குடிதண்ணீருக்காக நம்பியிருந்தனர். ஆனால் அதில்கூட குடிதண்ணீரை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் சபையின் நீர் விநியோகமும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் ஒரு லீற்றர் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் ரூ.130 இல் இருந்து 150 வரையும் விற்பனையாகின்றது.

இதனையே கொள்வனவு செய்து நோயாளர்கள் பருகிவருவது குறிப்பிடத்தக்கது. (அ-02)

# எண்ணெய் சுத்திகரிப்பு திட்டத்துக்கான ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய அனுமதி

கொழும்பு, ஓக. 16

அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபைக்கும் அம்பாந்தோட்டை எண்ணெய் சுத்திகரிப்பு தனியார் நிறுவனத்துக்கும் இடையே உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கு கடந்த 2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு நாளொன்றுக்கு 4 இலட்சத்து 20 ஆயிரம் பீப்பாய்கள் கொள்ளளவு கொண்ட பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

இந்தநிலையில், இரு தரப்பினருக்கும் இடையில் எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் விதிகளின்படி, திட்ட ஆதரவாளர் செயல்படவில்லை என்ற காரணத்தினால் இந்த உடன்படிக்கையை ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# திருமலையில் பிரான்ஸின் கடற்படை பயிற்சி நிலையம்!

## உதய கம்மன்பில கூறுகிறார்



கொழும்பு, ஓக. 16

திருகோணமலை கடற்படை முகாமில் கடற்படை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு பிரான்ஸ் அரசாங்கம் முன்மொழிந்துள்ளதாக ஊடக நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

“எந்தவோர் ஊடகத்திலும் வெளிவராத உண்மை, இதுவே முதல்முறையாக வெளிப்படுகிறது. திருகோணமலை கடற்படை முகாமில் பிரான்ஸ் கடற்படை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையமொன்றை நிறுவுவதற்கான பிரேரணையை பிரான்ஸ் அரசிடம் சமர்ப்பித்துள்ளது. அதற்கு கடற்படையினர் முழுமையாக சம்மதித்துள்ளனர். இது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என புலனாய்வு அமைப்புகள் தெரிவித்துள்ளன. சர்வதேச போர் அரசியலில் பிரான்ஸ் ஒரு அமெரிக்க நட்பு நாடாகும். 2016இல் அமெரிக்கா இலங்கைக்கு வர முயற்சித்தது உங்களுக்கு நினைவிருக்கிறது.”

“நீங்கள் முகமூடி அணிந்து, அமெரிக்காவாக உங்களால் செய்ய முடியாததைச் செய்கிறீர்களா? முகமூடி அணிந்தாலும் நாம் ஏமாறவில்லை என்று சொல்ல வேண்டும். நான் இதைச் சொன்னால் நம்பாதே. இந்தக் கதைகள் உண்மையா இல்லையா என்பதைக் கண்டறியவும் கிராம மக்கள் பொய்யான பலிகடாக்களை உருவாக்குகிறார்களா என்பதை மக்கள் முடிவு செய்ய முடியுமா? அல்லது உண்மையான பாதிக்கப்பட்டவரைப் பற்றிய எச்சரிக்கை இருக்கிறதா?” என்றும் கேட்டார். (ஐ)

# நிறுத்தப்பட்ட வீட்டு திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 16

கோவிட் மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் நிறுத்தப்பட்ட வீட்டுத்திட்டங்கள் உடனடியாக மீள ஆரம்பிக்கப்படும் என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியஆராச்சி தெரிவித்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.

“தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையை ஸ்தாபித்ததன் முக்கிய நோக்கம் இந்த நாட்டின் வறிய மக்களுக்கு வீடு ஒன்றைக் கட்டிக் கொடுப்பதாகும். நாட்டில் இன்னும் பல வீடற்ற குடும்பங்கள் உள்ளன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் செவன நிதியத்தின் கீழ் மிகவும் வறிய குடும்பங்களுக்கு வீடமைப்பு உதவிகள் வழங்கப்படுகின்றன.

மேலும், அரச ஊழியர்களுக்கு ‘சேவாபிமானி’என்ற கடன் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்படி, அவர்களுக்கு 14 வீத வட்டியில் 10 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது. ‘விசிறி கடன்’என்ற மற்றொரு திட்டத்தின் கீழ், நாட்டில் உள்ள அரசு சாரா ஊழியர்களுக்கு 12வீதக் கடன் வழங்கப்படுகிறது.

இந்த திட்டங்கள் மூலம் ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை மக்களுக்கு வழங்கியுள்ளோம். ஆனால், மக்களுக்கு நாங்கள் கடனாகக் கொடுத்த சுமார் 500 கோடி ரூபாய் பணத்தைத் திரும்பக் கொடுக்கவில்லை. தற்போது அந்தப் பணத்தை மீட்கும் பணியை துரிதப்படுத்தி இருக்கிறோம் - என்றும் கூறினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.